
குப்பிழான்

# பொன் விழா

## சிறப்பு மலர் 2014



வெளியீடு

குப்பிழான் விக்கினேஸ்வரா மன்றம் பிரித்தானியா

# பொன் விழா

குப்பிழான் விக்கினேஸ்வரா மன்றம் பிரித்தானியா

வெளியீடு - குப்பிழான் விக்கினேஸ்வரா மன்றம் பிரித்தானியா



# முன்னுரை

சைவமும், செந்தமிழும் தழைத்தோங்கி நிற்கும் எமது ஊராகிய குப்பிழான் தனிக்கிராமம் என்ற அந்தஸ்த்தைப் பெற்று 50வது ஆண்டில் காலடி எடுத்து வைக்கின்றது. தனிக்கிராமம் என்ற அந்தஸ்த்து எமக்கு 01-01-1964 அன்று தான் கிடைத்துள்ளது. ஆரம்பத்தில் எமது கிராமமானது மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டு ஏழாலை, புன்னாலைக்கட்டுவன், மயிலிட்டி ஆகிய மூன்று கிராமங்களுடன் சேர்க்கப்பட்டிருந்தன. இவை முறையே காங்கேசன்துறை, உடுவில், கோப்பாய் தேர்தல் தொகுதிகளில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

ஒரே சமூகமான, ஒரே இன மதத் தொடர்புகளைக் கொண்ட எமது மக்கள் மூன்று கிராமத்தவர்களாகப் பிரிக்கப்பட்டிருந்தார்கள். இதனால் குப்பிழான் கிராம எல்லைக்குள் வைத்தியசாலை, பாடசாலை, தபால்க்கந்தோர், பலநோக்குகூட்டுறவுச் சங்கம் போன்ற அடிப்படை வசதிகள் அமைந்திருக்கவில்லை. இதனால் பொதுமக்கள் பலர் பெரும் அவஸ்த்தைக்குள்ளாகினார்கள். அந்தக் காலத்தில் போக்குவரத்து வசதிகள் சிறப்பாக இயங்கவில்லை. ஓரளவு வசதி படைத்தவர்கள் மாட்டு வண்டிகள் வைத்திருந்தனர். மற்றவர்கள் கால் நடையாகச் சென்று தான் அன்றாட கடமைகளை ஆற்றியிருந்தனர். பல மைல்கள் தூரம் நடந்து சென்று தான் தமது தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது. நியாயபூர்வமாக எமது கிராமத்துக்குக் கிடைக்கவேண்டிய நற்பயன்கள் எமக்குக் கிடைக்கவில்லை. ஒரு கிராம

எல்லைக்குள்ளே ஒரு கிராம முன்னேற்றச் சங்கமே அமைக்கலாம் என்ற விதி அப்போது இருந்தமையால், மூவாயிரத்துக்கு மேற்பட்ட குப்பிழான் வாசிகள் அனைவரும் சேர்ந்து இயங்கக் கூடிய கிராம முன்னேற்றச் சங்கத்தைக் கூட அமைக்க முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் அபிவிருத்தியில் பின்தங்கிய கிராமமாகவே இருந்தது. இந்தக் காரணத்தால் ஒரு தனிக்கிராமமாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் எல்லோர் மனதிலும் மேலோங்கி இருந்தது.

தனிக்கிராமமாக உருவாகுவதற்கு அதற்கான அடிப்படை வசதிகள் இருக்க வேண்டியது அவசியமாகும். அதனை மனதில் வைத்துத் தான் எமது மூதாதையர்கள் பல அடிப்படைக் கட்டமைப்பை 1930ஆம் ஆண்டளவில் உருவாக்கினார்கள். அவைகள் தான் எமது பாடசாலை மற்றும் சனசமூக நிலையம் போன்றனவாகும். தனிக்கிராமத்திற்கான முயற்சிகளை 1950ம் ஆண்டளவில் ஆரம்பித்தபோது குப்பிழான் சனசமூக நிலையத்தின் ஆதரவுடன் மகஜர் ஒன்று தயாரிக்கப்பட்டு பொதுமக்களிடம் கையொப்பம் பெறப்பட்டு அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. தொடர்ந்து தூண்டுதல் இன்மையால் அந்த விடயம் முன்னெடுக்கப்படாமலேயே இருந்து விட்டது.

வெளியூர்களில் வசிக்கும் குப்பிழான் வாசிகளை உள்ளடக்கி குப்பிழான் வெளியூர் வாசிகள் சங்கம் அமைக்கப்பெற்றது. அந்தச் சங்கம் மீண்டும் அந்த முயற்சியை ஆரம்பித்தது. மீண்டும் ஒரு மகஜர் தயாரிக்கப்பட்டு அன்றைய பாராளுமன்ற பிரதிநிதி திரு.ஏ.நடேசன் அவர்களது சிபார்சுகளுடன் அரசாங்க அதிபர், உள்நாட்டு அமைச்சர் ஆகியோருக்கு அனுப்பப்பட்டது. மகஜர்கள் அனுப்புவதால் மட்டும் தனிக்கிராமத்தைப் பெற்றுவிட முடியாது என்பதை உணர்ந்த எமது ஊர்ப்பெரியவர்கள் கிராமத்தோடு சம்பந்தபட்டவர்களை சந்தித்து எமதுமக்கள் அநுபவிக்கும் துன்பங்களை விளக்கினார்கள் இதற்காக கொழும்பு போன்ற இடங்களுக்கு நீண்ட பயணம் மேற்கொள்ள வேண்டியிருந்தது.

1956ஆம் ஆண்டு குப்பிழான் கிராம முன்னேற்றச் சங்கம் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது. அந்த நிகழ்வு மாபெரும் நம்பிக்கையை அளித்தது. பல ஆலோசனை மகாநாடுகள் கூட்டப்பெற்றன. பல சந்திப்புக்கள் இடம்பெற்றன. எமது நியாயங்களை விளங்கிக் கொண்ட அப்போதைய காங்கேசன்துறை பாராளுமன்ற உறுப்பினர் சா.ஜே.வே.செல்வநாயகம் அவர்கள் அப்போதைய நிலைமையை தெளிவுபடுத்தி உள்நாட்டமைச்சர், அரசாங்க அதிபர், காரியதிகாரி

ஆகியோருக்கு கடிதங்களை அனுப்பினார்.

கேட்டவுடன் எதுவும் கிடைத்து விடுவதில்லை. அதனால் பல முயற்சிகள் அர்ப்பணிப்புக்களைச் செய்ய வேண்டிய தேவை இருந்தது. உடனடியாக பலன் எதுவும் கிடைக்கவில்லை. அன்றைய காலகட்டத்தில் ஒரு பகுதியை தனிக்கிராமமாக மாற்றுவது என்பது இலகுவான காரியமல்ல. அதுவும் இரண்டு சதுரகிலோ மீற்றர் பரப்பளவு மட்டும் கொண்ட பகுதியை தனிக்கிராமம் ஆக்குவது சாதாரண விடயமா? புதிய கிராமங்கள் உருவாகும் போது அதற்கான தேவைகளையும் செய்து கொடுக்க வேண்டும் உதாரணமாக தனிக்கிராமசேவகர், தபால்க்கந்தோர் , பலநோக்குகூட்டறவுச் சங்கம், பாடசாலை என்று பல தேவைகளை நிறைவேற்ற வேண்டும் இவைகள் அரசுக்கு மேலதிக செலவீனங்களை உருவாக்கும்.

959சதுர கிலோமீற்றர் கொண்ட யாழ்ப்பாணத்தில் ஏற்கனவே நாநூறுக்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. 1960ஆம் ஆண்டு யாழ்மாவட்ட சனத்தொகை ஆறு இலட்சங்கள். குப்பிழானில் வாழ்ந்த மக்களின் எண்ணிக்கை மூவாயிரம் ஆகும். தனிக்கிராமம் ஆக்குவதற்கு உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் அநுமதி வேண்டும். கொழும்பை மையப்படுத்தி இருந்த அரச நிர்வாகத்திடம் இருந்து சாதாரண பொதுமக்களான நாம் எப்படி தனிக்கிராமத்தைப் பெற்று விடலாம் என்பது கேள்விக்குறியாவே இருந்தது.

நியாயமான கோரிக்கை என்றாலும் காலத்தை இழுத்தடித்தார்கள். எம்மவர்களும் விடாப்பிடியாக முயற்சி செய்தார்கள். இதற்குப் பலர் ஆதரவு வழங்கி இருந்தாலும் இதை முன்னின்று செய்தவர்கள் ஒரு குறிப்பிட்ட சிலர் தான் அவர்களின் தன்னலமற்ற கடின உழைப்பின் பலனாக 09-11-1961ஆம் ஆண்டு குப்பிழான் கிராமத்தை அங்கீகரித்து விட்டதாக நிரந்தர காரியதரிசியிடமிருந்து கடிதம் கிடைத்தது. அரசாங்கத்தின் புதிய திட்டப்படி கிராமத் தலைமைக்காரருக்குப் பதிலாக கிராமசேவகர் நியமிக்கப்பட்டது. குப்பிழானுக்கு கிராமசேவகர் நியமிக்கப்படவில்லை. மீண்டும் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு 01-01-1964இல் தனிக்கிராம சேவகரோடு தனிக்கிராமமாக அங்கீகரிக்கப்பட்டது. இதற்கான முயற்சியில் எமது ஊர்ப் பெரியவர்கள் மற்றும் சா.ஜே.வே செல்வநாயகம் போன்ற தலைவர்களின் பங்களிப்பும் மிகவும் அளப்பரியது.

தனிக்கிராமம் என்ற அந்தஸ்தைப் பெற்று ஐம்பது ஆண்டுகள் கடந்து விட்டது. இந்த ஐம்பது ஆண்டுக் காலப்பகுதியில் எமது கிராமம் பல வளர்ச்சிகளைக் கண்டுள்ளது. ஆனாலும் 1986ம் ஆண்டு தொடக்கம்

2009 வரை உள்ள இடைப்பட்ட காலப்பகுதியில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக பல சொத்தழிவுகளையும் பல இடப்பெயர்வுகளையும் குறிப்பிட்ட உயிர் இழப்புக்களையும் சந்தித்து மீண்டும் வேகமாக அபிவிருத்தியடைந்து வருகின்றது.

எமது ஆலயங்களின் வளர்ச்சி அபரிதரமானது. பெரிய ஆலயங்கள் தொடக்கம் சிறிய ஆலயங்கள் வரை திருப்பணிகள் செம்மையாகச் செயற்பட்டு புதுப்பொலிவுடன் காட்சி தருகின்றன. ஆரம்ப காலங்களில் ஒரு ஆலயத்தில் மட்டும் தான் மகோற்சவம் நடைபெற்றது. இன்று மூன்று ஆலயங்களில் மகோற்சவம் நடைபெற்று வருகின்றது. போரினால் அழிக்கப்பட்ட பாடசாலை எமது மக்களின் பங்களிப்புடன் அபிவிருத்தி செய்யப்பட்டு புதுப்பொலிவுடன் காட்சி தருகின்றது. விக்கினேஸ்வரா விளையாட்டுக்கழக மைதானம் யாழ்மாவட்டத்தின் மிகச்சிறந்த மைதானமாகப் புனரமைக்கப்பட்டுள்ளது. குப்பிழான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகத்திற்காக இன்னுமொரு பெரிய மைதானம் அமைக்கப்பட்டு எமது ஊருக்கென்று இரு மைதானங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. குப்பிழான் சனசமூக நிலையம் நவீன வசதிகளைக் கொண்ட இருமாடிக்கட்டிடமாக அமைக்கப்பட்டு வருகின்றது. விவசாயிகளின் முன்னேற்றத்திற்காக விவசாயிகள் சங்கமும் சிறப்பாக செயல்ப்படுகின்றன. பற்றைக்காடுகளுடன் பார்ப்பவர்களைப் பயமுறுத்தும் இந்துமயானம் இன்று ஆலயம் போலக் காட்சி தருகின்றது. யாருமே எதிர்பார்க்காத வகையில் முற்றாக அழிக்கப்பட்ட சமாதி கோயில் இன்று புதுப்பொலிவுடன் காட்சி தருகின்றது. அத்தோடு சிவபூமி ஆச்சிரமம் அமைதியையும் வழங்குகின்றது. குப்பிழான் கிராமம் சிறந்த நிலவளமும் நிலக்கீழ் நீர்வளமும் கொண்ட விவசாய பூமி. அன்றைய காலகட்டத்தில் பெரும்பாலானோரின் தொழில் விவசாயமும் அதனைச் சார்ந்ததாகவும் இருந்தது. இன்று குப்பிழான் மக்கள் விவசாயத்தோடு வெவ்வேறு தொழில்களைச் செய்து வருகின்றார்கள். 50 வருடங்களுக்கு முற்பட்ட காலங்களில் சாமை, குரக்கன், தினை போன்ற தானியங்களே பெரும்பாலும் பயிரிடப்பட்டது. அதன் பின்னர் புகையிலை, வெங்காயம், மிளகாய் போன்ற பணப்பயிர்கள் பயிரிடப்பட்டு வருகின்றன. இந்த பணப்பயிர்களை மூலப் பொருளாகக் கொண்டு பல குடிசைக் கைத்தொழில்கள் நடைபெறுகின்றன. இதனால் பலருக்கு வேலை வாய்ப்பும் கிடைக்கின்றது. இன்று கரட், பீற்றூட் உருளைக்கிழங்கு போன்றனவும் பயிரிடப்படுகின்றன.

ஆரம்ப காலங்களில் விரல் விட்டு எண்ணுமளவுக்குத் தான்

மாணவர்கள் பல்கலைக்கழகம் சென்று வந்தனர். இன்று முப்பதிற்கும் மேற்பட்ட மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று வருகின்றனர். பொறியியலாளர்கள், மருத்துவர்கள், வழக்கறிஞர்கள், விஞ்ஞானிகள் போன்ற உயர் தொழில் வன்மையுடைய கல்விமான்களையும் எமது கிராமம் உருவாக்கி உள்ளது. தற்போது யாழ் மாவட்டத்தில் தலைசிறந்த பேச்சாளர்கள், எழுத்தாளர்கள் பெயர்ப்பட்டியலில் எமது கிராமத்தவர்களும் முதன்மை வகிக்கின்றார்கள். பல்வேறு கால கட்டங்களில் பல்வேறு பட்ட அறிஞர்களையும், துறை சார் நிபுணர்களையும் எமது கிராமம் உருவாக்கி உள்ளது. இவர்களின் பங்களிப்பால் எமது கிராமம் பெருமைப்படுத்தப்படுகின்றது. எமது கிராமத்தவரே இலங்கையில் இருந்து சென்ற முதலாவது நாசா விஞ்ஞானி என்பது எல்லோரும் பெருமை கொள்ளப்பட வேண்டிய விடயமாகும். இன்று புலம் பெயர்ந்து எமது உறவுகள் கடின உழைப்பினால் பெரும் செல்வந்தராகவும் பல துறைசார் நிபுணர்களாகவும் தமிழ் இனத்திற்கும் எமது கிராமத்திற்கும் பெருமை தேடித்தருகின்றனர். எமது கிராமம் ஐம்பது ஆண்டு காலமாக பல ஏற்றதாழ்வுகளை சந்தித்து வந்த போதும் எல்லோருடைய கடின உழைப்பினாலும், ஒற்றுமையினாலும் தனக்கேயுரிய கலை, கலாச்சார, பண்பாட்டு விழுமியங்களை பேணி வளர்ச்சிப் பாதையை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றமை பெரு மகிழ்சிக்குரிய விடயமாகும். எமது கிராமத்தின் முன்னேற்றத்திற்கும் அபிவிருத்திக்கும் நாம் அனைவரும் இணைந்து பங்களிப்புக்களை நல்குவோம்.

**நல்லதம்பி மோகனதாஸ்**

# FOREWORD

Kuppilan.... to achieve the status of a village, independent and self-sufficient with all humble facilities like health centers, post office, cooperative society, etc...... was not done in a day or in the cozy confines of the homes. It was a saga of perseverance, sacrifice and dedication. The landmark day was 1.1.1964, as Kuppilan enters its 50th year of existence this year.

Well, what is so special about the status, one might wonder. You might understand its significance if you would care to read further. The lack of minimum requirements at a reasonable reach was absent and one had to walk miles to get it, thus the place remained firmly in the confines of backwardness.

Rome was not built in a day, so goes the saying; and the struggle towards achieving the status of a village by the residents of Kuppilan began way back in 1930, when many infrastructural structures were created by my ancestors, so as to be eligible to lay claim to the status of a village. 1950..... the community submitted a memorandum and endeavored, but nothing came of it. 1956....... permission was granted to set up village Village Development Association, which triggered renewed hopes, efforts sprang to life in the form of letters, representations and meetings; but the efforts bore no fruit. However, 09.11.1961 saw sanction of recognition as a village, but not all went well, as no Gram Sewak was appointed. Another bout of perseverance and struggle yielded the ultimate goal.... and on 01.01.1964 appointment was made to the post of Gram Sewak and from then on there was no turning back.

These 50 years of coming into life as a village, Kuppilan has witnessed much growth and positives, the lows during 1986-2009 notwithstanding. Temples, educational institutions, play grounds, community centre with modern facilities, a centre for farming community, burning ghat, diversification in the form of cultivation of cash crops, increase in cottage

industries, handicrafts, employment avenues..... you name anything we have it.

Not just this, our village has given to the country many engineers, doctors, advocates, writers, technocrats and experts in various fields. The first Lankan scientist to the NASA hails from our village. While all these and much more has been achieved through sheer hard work and unity, our village still retains its indigenous art, culture and traditional values. This is a matter of pride and joy for all of us. May we continue to persevere in unison towards the continued and unimpeded progress of our village............ the one and only Kuppilan.

\- nallathambi mohandas

## குப்பிழான் விக்கினேஸ்வரா மன்றம்
## பிரித்தானியாவின்
## இறந்தகால, நிகழ்கால, எதிர்காலச் செயற்பாடுகள்

எமது தாயகத்தில் ஏற்பட்ட அசாதரண சூழ்நிலை காரணமாக பெரும்பாலன மக்கள் நாம் பிறந்த குப்பிழான் மண்ணை விட்டு இடம் பெயர வேண்டிய சூழ்நிலை ஏற்ப்பட்டது. இன்று நம் ஊர் மக்கள் பலர் பல்வேறு நாடுகளில் வாழ்ந்து வருகின்றார்கள். அவர்கள் எங்கு சென்றாலும் நமது சொந்தங்களையும் பிறந்த மண்ணையும் மறவாமல் எமது ஊரின் வளர்ச்சிக்கு ஏதோ ஒரு வகையில் தமது பங்களிப்பை வழங்கி வருகிறார்கள்.

பிரித்தானியா வாழ் குப்பிழான் மக்களும் நமது கிராமத்துக்கென்று குப்பிழான் விக்கினேஸ்வரா மன்றம் என்ற அமைப்பை 1996ஆம் ஆண்டு உருவாக்கி குப்பிழான் சொந்தங்களை இணைக்கும் பாலமாக செயற்பட்டு வருகின்றார்கள். ஆரம்பகாலங்களில் ஒன்று கூடல்கள் மற்றும் கடற்கரை சுற்றுலா என்று பல நிகழ்வுகளை செய்திருந்தோம். அதன் பின்பு 2008ஆம் ஆண்டு தொடக்கம் விளையாட்டு நிகழ்வும், 2010ம் ஆண்டு செம்மண் இரவு என்ற கலை நிகழ்வையும் நடாத்தி வருகின்றோம். எமது உறவுகளின் இன்பங்களில் பங்குகொண்டு வாழ்த்து மடல்களையும், துன்பங்களில் அஞ்சலிகளையும் எமது மன்றத்தின் சார்பில் வெளியிட்டு வருகின்றோம். எமது ஊரின் வளர்ச்சியில் எமது மன்றத்துக்கு பெரும்பங்குண்டு என்பதை யாரும் மறுக்க முடியாது. முற்றாக அழிந்த பாடசாலையை மீள் நிறுவுவதற்கு தொண்நூறுகளின் (1990) நடுப்பகுதியில் எமது மன்றத்தின் மூலம் நிதியுதவி வழங்கப்பட்டது. அதன் பின்னர் 2010ஆம் ஆண்டு தொடக்கம் ஊரின் அபிவிருத்தியில் எமது மன்றம் பெரும் பங்கு ஆற்றி வருகின்றது. இறுதியுத்தத்தில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு பிரித்தானியா, சுவிஸ்

மக்களின் நிதிப்பங்களிப்புடன் மாதாந்த கொடுப்பனவு வழங்கப்பட்டது. எமது மன்றத்தின் நிதி உதவியுடன் கிராம முன்னேற்றச் சங்கத்துக்கு கதிரைகள் மற்றும் மின் இணைப்புக்கள் வழங்கப்பட்டது. அதன் பின்னர் பல இலட்சங்கள் செலவில் பாடசாலையின் பிரதான மண்டபம் அமைத்துக் கொடுக்கப்பட்டது. இந்த அபிவிருத்தி பணியில் சுவிஸ் உதவும் கரங்கள் மற்றும் கிருஸ்ணர் ஐயாவின் பங்களிப்பு இங்கே நினைவு கூறத்தக்கது. இந்த வருடம் அதாவது 2014 எமது கிராம உதய பொன்விழா இதை பிரித்தானியாவில் சிறப்பாக கொண்டாடுகின்றோம். இந்த விழாவில் எமது பிள்ளைகளின் பேச்சுத் திறமையை வளர்ப்பதற்கும், புலம் பெயர் தேசங்களில் எமது இளம் சந்ததியினரிடையே தமிழ் மொழியை வளர்ப்பதற்கும் பேச்சுப் போட்டி மற்றும் பாடல் போட்டிகளை நடாத்தி வருகின்றோம்.

குப்பிழானின் வரலாற்றில் முதன் முதலாக விருது வழங்கி கௌரவிக்கும் செயற்ப்பாட்டை தொடங்குகின்றோம். நீண்டகாலமாக நாம் நம்மவர்களை கௌரவிப்பது இல்லை என்ற குறை இதன் மூலம் தகர்த்தெறியப்படும் என்பதில் ஐயமில்லை. இந்த வரலாற்று நாளில் அதாவது 29-11-14 அன்று குப்பிழான் விக்கினேஸ்வரா மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்குப் படிப்பதற்குத் தேவையான உபகரணங்கள் மன்றத்தின் சார்பில் பொன் விழா பரிசாக வழங்கப்படுகின்றது. எமது கிராமத்தின் வரலாற்றில் கிராமம் சார்ந்த ஒரேயொரு நூல்தான் வெளிவந்துள்ளது. அதுதான் குப்பிழான் தனிக்கிராமமாக உருவாகிய போது வெளியிடப்பட்ட கிராமோதய மலர். அந்த மலரில் குப்பிழான் சம்பந்தமான பல விடயங்கள் உள்ளடக்கப்படவில்லை. எமது வரலாறுகள் அழிந்துவிடக்கூடாது என்ற நல்நோக்கத்துடன் எமது அடுத்த இலக்காக "குப்பிழான்" என்ற கிராம மலர் உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளோம். எமது மன்றமானது தொடர்ந்து ஊரின் வளர்ச்சிக்கும், பிரித்தானிய குப்பிழான் மக்களை இணைக்கும் உறவுப்பாலமாக தொடர்ந்து செயல்படும் என்று இந்த பொன் விழா நன்நாளில் உறுதி எடுக்கின்றோம். இந்நாள் வரையிலும் எமது செயல்பாடுகளுக்குத் தோள் கொடுத்த உறவுகளுக்கு நன்றிகள்.

நன்றி

**நல்லதம்பி மோகனதாஸ்**

செயலாளர்

குப்பிழான் விக்கினேஸ்வரா மன்றம் பிரித்தானியா


## விருது வழங்கி கௌரவிக்கும் பெருமக்கள் விபரங்கள்

எமது கிராமத்தின் வளர்ச்சிக்கும் அதன் பெருமைக்கும் பலர் அன்று தொடக்கம் இன்று வரை பல அரிய சேவைகளைச் செய்து கொண்டு வருகின்றார்கள். இதில் பலர் அமரர்களாகி விட்டார்கள். அவர்களின் சேவைகள் போற்றுவதற்குரியது. விருதளிக்க, கௌரவிக்க பொருத்தமானவர்கள் பலர் இருந்தும் இந்த வருடம் நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கும் பத்துப் பேருக்கு இந்த விருதை வழங்கி கௌரவிக்கவுள்ளோம். தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் இந்த விருதை மற்றவர்களுக்கு வழங்கி கௌரவிக்க உள்ளோம். மூப்பின் அடிப்படையிலும் காலத்தின் தேவை கருதியும் இந்த பெருமக்களின் பெயர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. எண்ணற்ற சேவையாளர்கள் அமரர்களாகி விட்டனர். எனினும் அவர்களின் பெயர் விபரங்கள் மற்றும் அவர்களின் சேவைகள் குப்பிழான் என்ற வரலாற்று நூலில் பதிக்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றோம்.

| | |
|---|---|
| செம்மண் சுடர் | ஜயாத்துரை சண்முகலிங்கம் |
| செம்மண் சுடர் | சிவசுப்பிரமணியம் மகாலிங்கம் |
| செம்மண் சுடர் | கலாநிதி கந்தையா கணேசலிங்கம் |
| செம்மண் சுடர் | செல்லத்துரை ஞானசபேசன் |
| செம்மண் சுடர் | மதாணூஸ்ரீ விசுவாம்பா விசாலாட்சி |
| செம்மண் சுடர் | தம்பு தர்மலிங்கம் |
| செம்மண் சுடர் | ஆறுமுகம் சிறிஸ்கந்தமூர்த்தி |
| செம்மண் சுடர் | திருவாளர் சண்முகம் வைத்தீஸ்வரன் |
| செம்மண் சுடர் | பொன்னம்பலம் நடனசிகாமணி |
| செம்மண் சுடர் | கந்தையா கிருஷ்ணர் |

**நன்றி குப்பிழான் விக்கினேஸ்வரா மன்றம் பிரித்தானியா**





## பொன் விழாக்காணும் புனித பூமி

29- 11 -2014

கார்த்திகைத் திங்களில் நேர்த்தியாக
பொன் விழாக்காணும் புனிதத் தாயே!
வாழ்க என் தாயே வாழ்க! வாழ்க!

காலையில் கதிரவன் கதிர்க்கரம் நீட்ட
ஆனை முகன் ஆலயத்தில் அருள் மணி ஒலிக்கும்
அரச மரத்திருந்து அஞ்சுகங்கள் பேச
அருகிருந்து பூவையினம் பூபாளம் பாடும்

செம்பருத்தி இதழ் விரிக்கச்
சிறகடித்து வரும் வண்டு
அகம்மகிழ்ந்து மது அருந்தும்
செம்போத்துத் துணையோடு
கொஞ்சிப் பேசும்

மாங்குயிலும் பூங்குயிலும் மகிழ்ந்து பாட
மங்கள இசை கோழியினம் வாசித்து மகிழும்
அப்போது அங்கே
வாடைக்காற்றுச் சாடையாக ஊதும் போது
கோணமலை கொடுக்கும் பனை தென்னை மரங்கள்
கொடிகளாய் அசைய
வானப்பந்தலது பன்னீராய் மழையைத்தூவும்


இயற்கையின் வனப்பின் இருக்குமென்
இனிய தாயே ! இதயபூமியே வாழ்க!
கோயில்கள் கோபுரங்கள் மாடமாளிகைகள்
பாடசாலை நூல் நிலையங்கள்
அன்னசத்திரங்கள் அனைத்தையுங் கொண்ட
செம்மண் நிறைந்த செழுமைத்தாயே – நீ

தவந்திரு சிந்தாந்த வித்தகரை சித்தரைப் பெற்றவளே
கல்விமான்களைக் கலைஞர்களைப் பெயர்ந்த
மெல்லியவாளே வாழ்க! வாழ்க!
காலங்கள் உள்ளவரை கவிஞனாக வாழ்க!

புலம் பெயர்ந்தாலும் உனை மறவாது
உன் விழாக்காண அருஞ்செயலாற்றும்
மேற்குச் சீமையில் மேன்மையில் விழும்
மக்கள் விழ்த்த மண்ணில் வாழும் மக்கள்
விழ்த்த வாழ்க பல்லாண்டு ! வாழ்க! வாழ்க!

உனை நீங்கா நினைவோடு
இதயத்திற் பூசிக்கும்

**குப்பிழான் தங்கம்**




## ஆசிச் செய்தி

குப்பிழான் தனிக்கிராமமாக ஆக்கப்பட்டு இந்த ஆண்டு கிராமோதயத்தின் பொன்விழா ஆண்டாக கொண்டாடப்படுகிறது. புலம்பெயர் நாடுகளில் வாழும் கிராமப்பற்றாளர்கள் ஒன்று சேர்ந்து பொன்விழாக் கொண்டாட்டங்களை லண்டன் மாநகரில் நடத்தவிருப்பதை நினைத்து மிகவும் மனமகிழ்சி அடைகிறேன். கிராம பற்றாளர்களினால் கிராமத்தின் பெருமை பேணப்பட்டு பொன்விழா சிறப்பு மலர் வெளியிடுவதை நினைத்து சந்தோசம் அடைகிறேன். எங்கள் கிராமம் வலி தெற்கு பிரதேசசபை மயிலிட்டி. தெற்கு பிரதேசசபை கோப்பாய் ஆகியவற்றின் கீழ் மூன்று பிரிவுகளாக இயங்கி வந்தது. இதனால் இயற்கை அனர்த்தங்கள் மற்றும் அரச உதவிகள் பெறுவதில் எமது மக்கள் பல சொல்லணாத் துயரங்களை அநுபவித்து வந்தனர்.

மக்களின் துன்ப துயரங்களை உணர்ந்த வெளியூர் வாசிகள் சங்கம் மற்றும் பொது ஸ்தாபனங்கள் இணைந்து தமிழரசுக் கட்சியின் தந்தை எஸ். ஜே வி செல்வநாயகத்தின் உதவியுடன் 1964 இல் தனிக் கிராமமாக குப்பிழான் கிராமம் உதயமாகியது. இக்கிராமோதயத்தின் பொன் விழாக் கொண்டாட்டங்கள் லண்டன் மாநகரத்திலும் மற்றைய புலம் பெயர் நாடுகளிலும் கொண்டாடப்படுவதை இட்டு அக மகிழ்ச்சி அடைகிறேன். கிராமத்தின் வளங்களை வெளிப்படுத்தி மாணவர்களிடையே நடாத்தப்படும் போட்டிகளையும், சிறப்பு மலர் வெளியிடுவதையும் முன் நின்று நடத்தும் கிராம பற்றாளர்கள் சகல செல்வயோகம் மிக்க பெரு வாழ்வு வாழ்ந்து கிராமத்தின் விழுமியங்களையும் பாதுகாத்து பல்லாண்டு காலம் வாழ்க! வாழ்க! என ஆசிச் செய்தி மூலம் வாழ்த்துகிறேன்.

நன்றி

த தர்மலிங்கம்
மூத்த கிராமத்தொண்டன்



குப்பிழானும் புலம் பெயர்ந்தோரும்

பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்ற வானிலும் நனிசிறந் தனவே

கற்றதனால் ஆயபயனென் கொல்வாலறிவன்
நற்றாள் தொழாஅரெனின்

கற்க கசடறக் கற்றவை கற்றபின்
நிற்க அதற்குத் தக

எமது கிராமமாகிய குப்பிழான் காசிவாசி மகான் செந்திநாத ஐயருக்கு முன்பே பிரமாண்டமான கிராமமாக இருந்தாக ஆன்றோர் கூறி வந்தனர். இதனை 1931ல் பிறந்தவளாகிய நானும் நன்கு அறிவேன். ஆனால் காலப்போக்கில் எமது கிராமமாகிய குப்பிழானின் நான்கு பக்கங்களிலும் இருந்த கிராமங்கள் கொஞ்சம் கொஞ்சமாகப் பற்றிக் கொண்டன என்பதையும் நான் நன்கு அறிவேன்.

குப்பிழானின் வடக்கே காணப்படும் குரும்பசிட்டி முத்துமாரியம்மன் ஆலயத்தை குப்பிழான் மக்களே அமைத்து வழிபட்டனர். இதற்கு சான்றாக இன்றும் அவ்வாலயத்தில் குப்பிழான் மக்களே முன்னின்று விழாக்கள் போன்றவற்றை நடத்துவதைக் காண முடிகிறது. இதனால் குப்பிழானின் வடபகுதியில் சிறிதளவை குரும்பசிட்டியும், இவ்வாறு கிழக்குப்பகுதி தெற்குப் பகுதியின் ஓரளவு கிராமத்தை புன்னாலைக்கட்டுவன், மயிலங்காடும் பிடுங்கி விட்டது. மேற்குப் பகுதியின் பெரும்பாலன நிலப்பரப்பை ஏழாலை பிடுங்கியதால் இன்று குப்பிழான் சிறிய கிராமமாக காணப்படுகிறது.

உண்மையாக எங்கள் கிராமமாகிய குப்பிழான் பிரிக்கப்பட்டு ஆவணப்படுத்த முன்பும் இப்போதும் குப்பிழான் மக்கள் எங்கு

சென்றாலும் ஊர்ப்பற்றையும் உறவினர் பற்றையும் உள்ளத்தால் நேசித்து கிராமத்தையும் , பண்பாடு கலாச்சாரத்தையும் கண்ணிமை போல் பேணிக்காப்பாற்றி வருவதை அவர்களின் பேச்சு மூச்சு நடைமுறைகளில் காணலாம்.

எனக்கு நல்ல ஞாபகம் நான் அகதியாக கொழும்பு சென்றபோது பல அகதி மக்கள் வெளிநாடுகள் செல்ல வந்தனர். அவர்களில் ஆஸ்திரேலியா சென்று வந்த அகதி இளைஞர் என்னைக் கண்டு ஆனந்தம் கொண்டார். எப்படியாவது ஆஸ்ரேலியா அம்மன் கோயிலுக்கு "குருவூஞ்சல்" பா எழுதித் தரும்படி விநயமாகக் கேட்டார். மறுநாள் ஆஸ்திரேலியா போக வேண்டும் இப்போதே எழுதித் தரும்படி அவசரப்படுத்தினார்.

அவசரமாக திருவூஞ்சல் மட்டுமல்ல எதுவும் எழுதுவது முடிந்த காரியமன்று எனக் கூறினேன் . பின் எமது குலதெய்வமாகிய சொக்கவளவு சோதி விநாயகர் பெருமான் அருளால் எழுதிக் கொடுத்தேன். அவரும் நன்றி உணர்ச்சியுடன் அதனைப் பெற்றுக் கொண்டார். இதனால் நன்றாக ஒன்றை மட்டும் உணருகிறேன் .புலம் பெயரும் எந்த நாட்டு மக்களோ கிராம மக்களோ தமிழையும் பண்பாடு கலாச்சாரம் முதலியவற்றை மறக்காது கண்ணை இமை காப்பது போலப் பாதுகாக்கின்றனர் என்பது உண்மையாகும். இதனால் புலம் பெயர் மக்கள் அவர்களின் பணி உயர வாழ்த்தி ஆசிர்வதிக்கிறேன்.


**வணக்கம்**

நன்றி

சமூகமாமணி, புலவர்மணி

சிவமயச் செல்வி

**விசுவாம்பா விசாலாட்சி மாதஜி**



ஈழத்திருநாட்டின் சிவபூமி


ஈழத்திருநாட்டின் சிவபூமி என்று அழைக்கப்படும் சிறிய கிராமம் குப்பிழான் ஆகும். சைவமும் தமிழும் தழைத்தோங்கி ஏராளமான புத்தி ஜீவிகளையும் சமூகத் தலைவர்களையும் உருவாக்கிய பெருமை எம்மண்ணுக்கே உரித்தாகும். எம் மண் தனிக்கிராமமாக உருவாக்கப்பட்டு ஐம்பது ஆண்டுகள் ஆகிவிட்டது. இதற்கு பாடுபட்ட அனைத்து உறவுகளுக்கும் நன்றிகளை தெரிவிப்பதோடு குப்பிழான் மக்களாகிய நாங்கள் அனைவருக்கும் பெருமையும் கடமையும் பட்டிருக்கின்றோம். இயற்கை எழில் மிகுந்த பசுமையான அமைதியான கிராமம் குப்பிழான். அதன் செம்மண் நிலம் இயற்கை நமக்கு தந்த கொடை என்றுதான் சொல்ல வேண்டும் அங்கு செழித்து வளர்ந்துள்ள மலர்ச்செடிகளும், பச்சைப் பசேலெனக் காட்சியளிக்கும் தோட்டங்களும் காண்பவர் மனதைக் கவர்வன. நமது கிராமத்தின் வளர்ச்சியும், வரலாறும் தனிச்சிறப்புடையன. பல ஆலயங்களைக் காணலாம். எமது கற்பக விநாயகர் எல்லோருக்கும் கற்பக விருட்சமாய் காட்சியளிப்பது கண்கொள்ளாக் காட்சியாகும். நம் ஊரின் வளர்ச்சிக்கு பெரியோர்கள் மற்றும் புத்தியீவிகள், புலவர்கள், பாவலர்கள், நலன்விரும்பிகள், உறவுகள் எல்லோரும் பாடுபட்டனர். அது போல புலம் பெயர் தேசத்தில் உள்ள எல்லா உறவுகளும் நம் கிராமத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாகவும், ஒற்றுமையாகவும் செயல்பட வேண்டும் என்றும் நம் தேசத்தின் உறவுகளுடன் தொடர்புகளை வைத்திருப்பதோடு, ஒவ்வொரு வருடமும் இப்படியான விழாக்களை நடத்த எல்லோரும் ஒத்துழைக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

நன்றி

தலைவர்

திரு. சு. அருந்தவராஜா

குப்பிழான் விக்கினேஸ்வரா மன்றம் பிரித்தானியா



சித்தம் நிறைந்த செம்மண் பூமி

பெற்ற தாயும் பிறந்த மண்ணும் ஒருவர்க்கு சித்தம் நிறைந்த செம்மண்ணாகத் தோன்றும். செந்தமிழும் சைவமும் சிறப்புடன் மிளிரும் செம்மண் பூமியாம் எம் குப்பிளான் மலர்ந்து இன்று பொன்விழாக் காணுவதையிட்டு மட்டில்லா மகிழ்ச்சி அடைகிறேன். இவ்விடத்தில் நம் குப்பிழான் கிராமம் தனிக் கிராமமாகத் தோன்றுவதற்கு அயராது உழைத்த அத்தனை சான்றோர்க்கும் எனது இதயம் நிறைந்த நன்றிகளைத் தெரிவிப்பதில் மிகுந்த களிப்படைகிறேன். நான் தத்தித் தத்தி தவழ்ந்து தடம் பதித்த மண் காலடியைப் பதிவு செய்யும் அதே வேளை என் கால்களில் தன் பதிவை தவறாமல் பதிவு செய்ததை என்றும் மறக்க இயலாது. குடு குடு என நடந்து நமது குல தெய்வமாம் காளியம்மன் கோயிலுக்கு அம்மா கூட்டிச் சென்று கும்பிட்டது ஞாபகம். ஏடு தொடக்க எனது ஐயாவின் கையைப் பிடித்துக் கொண்டு நடந்து பாடசாலை சென்று, ஆசிரியப் பெருந்தகை திருமதி பறுவதம் தம்பிப் பிள்ளை அவர்கள் செப்புத் தட்டத்தில் நெல்லை இட்டு அதில் என் கையைப் பிடித்து அ,ஆ எழுதிக் காட்டிச் சொல்லித் தந்த ஞாபகம் முற்றத்து மண்ணில் என் சுட்டு விரலைப் பிடித்து அழித்து அழித்து எழுதிய அழகான செம்மண்.

சித்தாந்த வித்தகர் காசி வாசி செந்திநாதையர் அவதரித்துத் தனது திருப்பாதங்களை தடம் பதித்த புண்ணிய பூமி. சித்தர் சரவணச் சாமியார் அற்புதங்கள் பல செய்து சமாதியடைந்த அற்புத மண். வித்துவான் சங்கீத பூசணம் செல்லத்துரை அண்ணாவிமார் பீதாம்பரம், வேலையாவும், பொன்னையாவும் கூத்துக்கள் கற்பித்து , மேடையேற்றிக் குதூகலித்துச் சிறப்பித்த மண். நாடகாசிரியர் திரு . க. சொர்க்கலிங்கம், விளையாட்டு வீரர்கள் , ஆசிரியர்கள் திரு. சுப்பிரமணியம், திரு.சீ .அம்பலவாணர் திரு. சி.சிவஞானம் மற்றும் திருவாளர்கள் திரு . சி. தங்கராசா ,கு. கணேசசுந்தரம், சி. இராசதுரை , தா இராசரத்தினம். பீ.திரிபுரநாதன், வ.மகாலிங்கம், பரமநாதன் , பொ. நடனசிகாமணி ,

# குப்பிழான் விக்கினேஸ்வரா மன்றம் பிரித்தானியா , உதவும் கரங்கள் அமைப்பு சுவிஸ் ஆகியன இணைந்து எமது கிராமத்தில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்
















2009/05/04









# குப்பிழான் விக்கினேஸ்வரா மன்றம் பிரித்தானியாவில் நடாத்திய நிகழ்ச்சிகள்

















சி.சிவானந்தன் இன்னும் பலரைப் பெற்ற அழகிய மண். பள்ளியில் படித்து வீடு திரும்பும் போது கூட்டாளிப் பையங்களுடன் மாங்காய் பறித்து மரத்திலே குத்தி உடைத்து எல்லோரும் உண்டு மகிழ்ந்த காலமதை எளிதாக மறக்க முடியுமா? தோட்டத்துக்கு பாட்டியோடு பாட்டாவுக்கு சாப்பாடு எடுத்து செல்லும் போது தோட்டத்து வரம்பில் நின்று பாசிப்பயிற்றாங்காயை பிய்த்து உண்ணுகையில் பாட்டி "பிஞ்சுக்காயை ஏனடா பிய்த்து நாசமாக்குறாய் முற்ற விடடா" எனக் கடிந்து கையைப் பிடித்து போ என்ற மண்ணின் ஞாபகம்

விஞ்ஞான வளர்ச்சியின் பயனைச் செயல் படுத்தும் முன் உழவு இயந்திரங்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள் ஆகியவற்றை பாவிப்பதற்கு பதிலாக தோட்டங்களைப் பண்படுத்தி மண்ணை சொகுசுபடுத்துவதற்கு ஏரில் பூட்டிய எருது மாடுகளையே அன்று பயன் படுத்தினார்கள். அத்துடன் கிணற்றில் இருந்து நீரைப் பயிர்களுக்கு பாய்ச்சுவதற்கு நெம்பு கோலாக துலாவை பயன்படுத்தி நான்கு பேரின் உழைப்பே கூட்டு முயற்சியாக உழைத்ததையும் மறக்க முடியாது. கற்கரைக் கற்பக விநாயகர் ஆலயத்தில் திருவிழாக்காலங்களில் பங்குபற்றி தேரிழுக்கும் வேளையில் அம்மாவுடன் கூடிச்சென்று வடம் பிடித்துத் தேர் இழுத்த ஞாபகம் இன்னும் மனதில் நீங்கா இடம் பெற்று இருக்கிறது. அத்துடன் சொக்கவளவு சோதிவிநாயகர் ஆலயத்திலும் காளிகோயிலிலும் நடைபெற்ற திருவிழாக் காலங்களில் பங்குபற்றி மகிழ்ந்ததையும் வரிசைக்கிரமமாக நின்று பொங்கல், சுண்டல் , வாழைப்பழம் வாங்கி உண்டது. இன்றும் நாவில் இனிக்கிறது.

என் சித்தம் நிறைந்த செம்மண் பூமியை பல்லாயிரக் கணக்கான மைல்களுக்கு அப்பால் குடிபெயர்ந்து வாழ்ந்து வரினும் எம்மக்கள் மண்ணின் நீங்காத நினைவோடு ஆலயங்கள் , கல்விக்கூடங்கள் , நூல் நிலையங்கள் , விளையாட்டு மைதானங்கள், எனப் பலவற்றையும் புனருத்தானம் செய்தும் , பூரிப்போடும் பொன் விழாக்காணுவதைப் பார்த்து மகிழ்ச்சியடைவதோடு இதயம் நிறைந்து மனமார வாழ்த்துகின்றோம் நன்றி வணக்கம்

**கதிரிப்பிள்ளை தாங்கவேல்**
முன்னாள் தலைவர்
குப்பிழான் விக்கினேஸ்வரா மக்கள் மன்றம்



# பொன் விளையும் பூமியாகிய எங்கள் கிராமம்

சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம்
ஓய்வு நிலை உதவிப்பணிப்பாளர்

காசிவாசி செந்திநாதையர் பிறந்த ஊர் கலையும் , தமிழும், சைவமும் வளர்ந்த மண் எங்கள் சொந்த மண் குப்பிழான் தனிக் கிராமமாகி பொன் விழாக்காணும் புனித ஆண்டு -2014

சிவபூமியாகிய ஈழமணித் திருநாட்டின் சிரசாக ஞானபூமியாகிய யாழ்ப்பாணக் குடாநாடு மிளிர்கிறது. யாழ்ப்பாணக் குடாநாட்டின் சிறந்த செம்மண் வளமுடைய பிரதேசமாகப் பொன் விளையும் பூமியாகிய எங்கள் கிராமம் திகழ்கிறது. உழுதுண்டு வாழும் விவசாயத் தொழிலையே எங்களுடைய முன்னோர்களில் பலர் செய்து வந்தார்கள். தங்களுடைய நெற்றி வியர்வையை நிலத்தில் சிந்திப் பாடுபட்டு உழைத்தே நமது மக்கள் வாழ்ந்து வந்தார்கள். பிற மத ஊடுருவலுக்கு இடம் கொடுக்காமல் உறுதியான கொள்கையுடன் தனித் தமிழ்ச் சைவக் கிராமமாகவே எங்களுடைய மண்ணை எமது மக்கள் பேணி வந்தார்கள். 1964 ஆம் ஆண்டு எங்கள் கிராமம் தனிக்கிராமம் ஆகிய பொழுது நான் பதினைந்து வயதுச் சிறுவனாக இருந்தேன். அன்றைய நாளில் எங்கள் கிராமம் முழுவதும் விழாக்கோலம் பூண்டிருந்தது. தனிக்கிராமம் ஆவதற்காகத் தன்னையே அர்ப்பணித்துப் பணியாற்றியவர்களில் ஒருவராகிய திரு.தம்பு தருமலிங்கம் 90 வயதைத் தாண்டிய முதியவராக இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார். எங்கள் கிராமத்தின் பொது நிறுவனங்கள் அனைத்து வளர்ச்சிக்காகவும் அவர் ஆற்றிய பங்களிப்பு அளப்பரியது. இவரைப் போலப் பல பேருடைய கூட்டு முயற்சியினால் தான் எங்கள் கிராமம் தனிக் கிராமமாக உதயமாகியது.

கிராமோதய விழாவில் வெளியிடப்பட்ட மலரில் மூதறிஞர் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் குப்பிழான் கிராமத்தைப் பற்றிப்

பின்வருமாறு கூறுகின்றார். யாழ்ப்பாண குடாநாட்டில் குப்பிழான் கிராமம் ஒரு "திருப்பரங்குன்றம்". மகான் செந்திநாதையார் போன்ற மகான்கள் பிறந்தமையால் இக்கிராமம் புனித பூமியாகத் திகழ்கிறது. ஆறுமுக நாவலருடைய மாணவனாக இருந்த காசிவாசி செந்திநாதயர் ,நாவலரால் கற்பிக்கப் பெற்ற வண்ணார்பண்ணை சைவப் பிரகாச வித்தியாசாலையில் ஆசிரியராக,அதிபராக எல்லாம் இருந்து பணியாற்றினார். இவர் தேவாரம், வேதசாரம், கந்தபுராணம், நவநீதம் , நீலகண்டபாஷியம், சைவ வேதாந்தம் போன்ற பல அரிய நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். இவர் யார் என்பதை எமது கிராமத்தின் அடுத்த சந்ததியினர் அறிய வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்துடன் 1983 ஆம் ஆண்டு குப்பிழான் சைவ மகாசபையினர் இவருடைய திரு உருவச் சிலையை சொக்கவளவு சோதிவிநாயகர் ஆலய முற்றத்தில் ஸ்தாபித்தார்கள். எமது கிராம மக்களிடம் விநாயகர் வழிபாடு சிறப்பிடம் பெற்றுள்ளது. இங்குள்ள பல பொது ஸ்தாபனங்கள் விக்கினேஸ்வரனின் நாமத்துடனேயே இயங்கி வருகின்றது. எமது கிராமத்தின் அறிவாலயம் விக்கினேஸ்வரா மகாவித்தியாலயம் என்றும். சனசமூக நிலையம் விக்கினேஸ்வரா சனசமூக நிலையம் என்றும்,விளையாட்டுக்கழகம் விக்கினேஸ்வரா விளையாட்டுக்கழகம் என்றும் விநாயகப் பெருமானின் நாமத்தை தாங்கியேயுள்ளது. இதைப்போல குப்பிழான் தெற்கில் குறிஞ்சிக்குமரன் சனசமூக நிலையமும் , குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக்கழகமும் துடிப்போடு செயற்பட்டு வருகின்றன.

முத்தமிழாகிய இயல், இசை , நாடகம் ஆகிய மூன்றும் ஒழுங்கே வளர்ந்த கிராமமாக எங்கள் கிராமம் காணப்படுகின்றது. இசை எமது கிராமத்து மக்களின் உணர்வுகளோடு ஒன்றிய கலையாகவே வளர்ச்சி அடைந்துள்ளது. தமிழரின் இசையாகிய பண்ணிசையை ஈழமணித் திருநாட்டில் அறிமுகப் படுத்திய பெருமை எங்கள் கிராமத்தில் பிறந்த இசை வல்லவர் செல்லத்துரை அவர்களையே சாரும். இவரைக் குப்பிழான் செல்லத்துரை என்றே யாழ்ப்பாண மக்கள் அனைவரும் அழைத்தனர். படிப்பறிவு அவ்வளவு இல்லாவிட்டாலும் செவிநுகர் கனிகளாக காதால் இசையினைக் கேட்டு இசை விற்பன்னராகத் திகழ்ந்த பலர் நமது கிராமத்தில் இருந்தார்கள். திரு.வீ.வேலையா, திரு . க.இரத்தினம் ஆகியோரை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். திரு. கதிர்சுந்தரலிங்கம் நாடறிந்த இசைக் கலைஞராகவும் நாடகக் கலைஞராகவும் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார். நாடகக் கலைஞராக தன்னையே அர்ப்பணித்து பல மரபு வழி நாடகங்களை

அரங்கேற்றிய அண்ணாவியராக திரு அ.பீதாம்பரம் அவர்கள் திகழ்ந்தார். பீதாம்பரம் அரங்கேற்றிய நாடகங்களில் கிருஷ்ண லீலா நாடகம் மிகவும் சிறப்பிடம் பெற்றிருந்தது. குப்பிழான் அண்ணாவியர் பீதாம்பரத்தின் நாடகங்களைப் பார்த்தே தனக்கு நாடகக் கலையில் ஈடுபாடு வந்ததென்று குரும்பசிட்டியைச் சேர்ந்த கலைப்பேரரசு திரு ஏ.ரி பொன்னுத்துரை அவர்கள் இலங்கை வானொலிக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டிருந்தார்.

நமது கிராம மக்களில் பலர் விவசாயிகளாக இருந்த பொழுதிலும் கொள்கைப் பிடிப்பு உள்ளவர்களாக வாழ்ந்து வந்தார்கள். தந்தை செல்வா காலம் முதல் நமது கிராம மக்களில் பெரும்பான்மையானோர் தமிழ் தேசத்தின் ஆதரவாளர்களாகவே இருந்தார்கள். சலுகைக்கு விலை போகாத கொள்கை உறுதி இவர்களிடம் இருந்தது. விக்கினேஸ்வரா சனசமூக நிலையத்தின் வளர்ச்சிக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய திரு வ. பண்டிதர் சிறந்ததொரு காந்தியவாதியாகத் திகழ்ந்தார். தனது திருமண வைபவத்தில் பட்டு வேட்டி சால்வை அணிய மறுத்து கதர் வேட்டி சால்வை அணிந்தவர். மகாத்மா காந்தி இறந்த தினத்தன்று உண்ணாவிரதமிருந்து அவருக்கு அஞ்சலி செலுத்தியவர். இறுக்கமான தெய்வ நம்பிக்கை கொண்ட நமது கிராம மக்கள் பக்தி வலை வீசி இறைவனைப் பற்றிப் படித்தார்கள். இவர்களுடைய வழிபாட்டில் நடிப்பு இல்லை. திரிகரண சுத்தியுடன் இறைவனை வழிபட்டார்கள். விளம்பரம் தேடவும், விலாசம் தேடவும் இவர்கள் கோயிலுக்கு வருவதில்லை. தங்களுடைய துன்ப துயரங்களுக்குத் தீர்வு கண்டு மன அமைதி பெறும் இடமாகவே ஆலயங்களை கருதினார்கள். “என் கடன் பணி செய்து கிடப்பதே” என்ற அப்பர் பெருமானின் வாக்கிற்கு அமைய ஆலயங்களில் செய்யும் பணிகளை எல்லாம் தொண்டாகவே செய்தார்கள். இன்றும் செய்து வருகிறார்கள்.

தெய்வத்தமிழாகிய திருமுறைகளில் எமது கிராம மக்களுக்கு நிறைய ஈடுபாடு உண்டு. திருமுறைகள் ஓதுவதிலும் கூட்டுப்பிராத்தனை செய்வதிலும் எமது கிராமத்துப் பெண்கள் பலர் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றார்கள்.

உள்நாட்டில் ஏற்பட்ட யுத்தத்தினால் எமது கிராமம் பெரும் அழிவுகளை எதிர் நோக்கியது. பாடசாலை கோயில்கள், வீடுகள் சிதைக்கப்பட்டன. ஏழு வருடங்களுக்கு மேல் மனித சஞ்சாரமற்ற காடாக பொன் விளையும் பூமியாக எமது கிராமம் காணப்பட்டது. தனித்துவமாக யாரிடமும் கையேந்தாத நிலையில் எமது மக்கள்

எதிலிகளாக , அகதிகளாக அலைந்தனர். சிலர் புலம் பெயர்ந்து உலகின் பல நாடுகளுக்கும் சென்றனர். கட்டுக்கோப்பாக உறவுகளுடன் இணைந்து வாழ்ந்த குடும்பங்கள் அனைத்தும் சிதறுண்டு திக்குத் திக்காக பிரிந்து போகும் அவல நிலை ஏற்ப்பட்டது. இலங்கையில் வாழும் தமிழர் சமுதாயம் கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக பல்வேறு சோதனைகளையும், வேதனைகளையும் கண்டே வாழ்ந்து வருகின்றனர். இத்தகைய சோதனைகளும், வேதனைகளும் நமது மக்களுக்கு பல்வேறு போதனைகளை (படிப்பினைகள்) தந்துள்ளது. இத்தகைய படிப்பினைகளை எல்லாம் ஆதாரமாகக் கொண்டு பல்வேறு சாதனைகள் செய்யும் சமுதாயமாக எமது மக்கள் மாறி வருகின்றார்கள். “மீண்டும் தொடங்கும் மிடுக்கு” என்ற மகா கவி உருத்திர மூர்த்தியின் வாக்குக்கு அமைய புதிய உத்வேகத்துடன் செயல்பட ஆரம்பித்துள்ளார்கள்.

புலம் பெயர் நாடுகளில் வாழும் எமது மண்ணின் மைந்தர்களின் கூட்டு முயற்சியினால் அழிவுற்ற ஆலயங்கள் புணரமைக்கப்பட்டு வருகின்றன. முற்றாக சிதைக்கப்பட்ட எமது கல்லூரியின் பிரதான மண்டபம் மீண்டும் புதுப்பொலிவுடன் அமைக்கப்பட்டுள்ளது. விக்கினேஸ்வரா சனசமூக நிலையம் பல இலச்சக்கணக்கான பணத்தில் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு வருகிறது. அனைவரும் இறுதி யாத்திரை போகும் மயானம் புதுப்பொலிவுடன் காட்சி தருகிறது. நவீன வசதிகளுடன் கூடிய விளையாட்டு மைதானம் அமைக்கப்பட்டுள்ளது. பொன்விழாக் காணும் எங்கள் கிராமம் இன்று புதுப் பொலிவுடன் விளங்குகிறது.

## வாழ்த்துச் செய்தி

(குப்பிழான் வடக்கு (ஜெ/211) கிராம சேவையார்)

சைவத்தையும், தமிழையும் நம் கண்ணெனப் போற்றி வாழும் குப்பிழான் கிராமம். 2014ம் ஆண்டில் தனிக் கிராமமாகிய பொன்விழா நிகழ்வுகளைக் கொண்டாடுவதை எண்ணி மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். செம்மண்ணையும் செழிப்பான பயிர்களையும், சுத்தமான நல்ல குடிநீர்க் கிணறுகளையும் கொண்ட அழகிய கிராமம். இருபதிற்கும் மேற்பட்ட ஆலயங்களையும் பத்திற்கும் மேற்பட்ட குறிச்சிகளையும், நான்கு சனசமூக நிலையங்களையும், இரண்டு பெரிய விளையாட்டு மைதானங்களையும், யா /குப்பிழான் விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம், காடா கடம்பை இந்து மயானம், வடக்கு, தெற்கு விவசாயிகள் சம்மேளனம் எனப் பல்வேறு பொது அமைப்புக்களையும் கொண்டிருப்பது சிறப்பானது. விவசாயிகள் முதல் அரச தொழில் புரிவோர், சமய, சமூகப் பணியாற்றுவோர் எனப் பலரும் கிராமப் பற்றுடன் வாழ்வதனை அறிந்து மெய் சிலிர்க்கிறேன். கிராமத்தில் வாழ்பவர்கள் மட்டுமன்றி வெளிநாடுகளில் வாழுகின்றவர்களும் முன் மாதிரியாக செயற்பட்டு வருகின்ற கிராமப்பற்றுள்ள அனைத்து உள்ளங்களிற்கும், நீண்ட காலம் கிராமசேவையாளராகப் பணியாற்றியவன் என்ற வகையில் எனது நன்றிகளைத் தெரிவிப்பதோடு , பொன்விழா நிகழ்வுகள் சிறப்பாக அமைய எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.


செ. ஞானசபேசன்

ஓய்வு பெற்ற கிராமசேவையாளர்

## என்றும் எங்கள் கிராமத்தை இதயத்தில் சுமப்போம்

உலகப் பூமிப்பந்தில்
தமிழன் காலடி பட்டு
சிவந்து போன மண்
எங்கள் செம்மண் கிராமம்.
வரலாறுகள்
பல கண்டு
எத்தனை
இடர்பாடுகள்
அனைத்தையும்
துடைத்தெறிந்து
அழகான
கம்பீரம் கொண்டது எங்கள்
செம்மண் கிராமம்.
எத்தனை புலம்பெயர்வுகள்!
எத்தனை உள்ளத் தடுமாற்றங்கள்!
எத்தனை நடந்தாலும்
மனது ஒரு நாளவது
எங்கள் செம்மண் கிராமத்தை
நினைக்காது மறந்துதான்
போய்விடுமா?
அத்தனை புகழ்
கொண்ட எங்கள் மண்
நாம் எங்கு சென்றாலும்
எங்கள் காலடி பட்ட புழுதி மண்
நினைவில் இருந்து
அழிந்துதான் போய் விடுமா?
எத்தனை ஆண்டுகள் வரலாறுகள்
எத்தனை உணர்வுகள்
அத்தனையும் தந்த மண்
செம்மண் அதனை மறந்து
வாழத்தான் எங்கள் இதயமும்
விரும்பிடுமா?
காற்றுக்கள் மாறி அடிக்கலாம்.
பூமியே சுற்றாது நின்று போகலாம்
நம் செம்மண் கிராமத்தில் வைத்த
பாசம் மட்டும் அழிந்து போகுமா?
என்றும் எங்கள் கிராமத்தை
இதயத்தில் சுமப்போம். அழிவுகள்
எத்தனை கண்டாலும் எங்கள்
மனதில் பூத்த கிராமம் வாழ்ந்திடும்
பல்லாயிரம் ஆண்டுகள் வாழ்க!
செம்மண் கிராமம்

**புலம் பெயர் குப்பிழான் மக்கள்**





## என் செம்பாட்டன்

செம்பாட்டு முற்றந் திருத்தி என் அம்மா
முதல் நாள் என் கை பிடித்து
எழுதிப் பழக்கிய – என்
அருமை மிகு குப்பிழான் மண்ணே!
பாசம் மிகு பசுமை மிகு மண்ணே!
பார்க்கும் வடக்கே குரும்பசிட்டியும் பக்கத்தே கட்டுவனும்
தெற்கில் மயிலங்காடு கிழக்கில் புன்னாலைக் கட்டுவனோடு
மேற்கில் ஏழாலை என்றும் எழில் பூமி கொண்ட
வண்ண நிலமே! வனப்பு மிகுந்த தமிழ் மண்ணே – வணக்கம்
நான் இருக்க பரணிப் பந்தினிலே – ஓர்
ஊர் தந்த நாயகரே வணக்கம்
நல்ல வழி காட்டி நம்மை நல் வழி
வளர்த்தெடுத்த ஆசான்களே வணக்கம்
செம்பாட்டு மண்ணிலே செங்குருதி தெளித்தோரே
உங்களுக்கும் என் வணக்கம்.
வாருங்கள் பாருங்கள்
பரணியிலே ஊர் ஏறிவர
வடம் பிடித்த பலரிங்கு விடுபட்டு போயினர்

பூவரசு இலைப் பீப்பியும் கிளுவை மரப் பொன் வண்டும்
தென்னையடிப் பச்சை வண்ணக் கிளியும் என் சொந்தம்
மதவடி மதகு என் இருக்கை
செம்பாட்டு மண்ணும் புகைதரு புகையிலையும்
பல சுவைதரு வாழை, பலா,மாவுடன் மரவள்ளிக் கிழங்கும்
அள்ளி விளைந்த காய் கறிகளும்
நாவிலே இன்றும் சுவையாகிக் கிடக்கிறது
பள்ளி அறையும் பல காலம் நிறம் பூசா கரும்பலகையும்
தோள்கள் சுமந்த புத்தகப்பையும்
மண்டையிலே இன்றும் மாறாது இருக்கிறது
பூவரசம் தடி எடுத்து முதுகில் புடப் போட்ட
வாத்தியாரும் வந்து வந்து போகிறார் மனத்திரையில்

கேணியடி தொடக்கம் பல வளவுக்குள்
என் பெருமான் வைரவரும்
கற்கரை, சொக்கர்வளவு, முத்தர்வளவு என
வண்ண முக விநாயகரும்
கன்னிமார் கோவிலும் காளியின் ஆலயமும்
வீரபத்திரரும், வேள்விக்கு அன்னமார் கோயிலும்
கொண்ட நம்மூரே!
கந்தனையும் அவன் அப்பன்சிவனையும் ஏன் மறந்தனையோ?

மண்ணிற்கு பெயர் தந்த மாணிக்கங்களே!
மக்கள் சேவையே மகேசன் சேவையென
எண்ணி கருமம் முடித்த என் மண்ணின் உறவுகளே
உங்கள் புகழ் எடுத்தூத என் அகவை போதாது
வண்ணத் தமிழிலும் வார்த்தை எனக்கில்லை
கைகள் குவித்து கவி வணக்கம் நான் வைப்பேன்
திசையது நோக்கி திரும்பவும் பெரு வணக்கம்

எம். எஸ் சிவகுமார்

**பொறியியலாளர்**

**இலண்டன்**

## ஆசிச் செய்தி

ஆறு. திருமுருகன்

சைவமும் தமிழும் தம்முயிராகக் கருதி வாழும் மக்களின் மகத்தான திருவூர் குப்பிழான். இத் திருவூர் திருக்கோயில் மணியோசையும் திருமுறையும் சதா ஒலித்த வண்ணம் இருக்கும். நீறணிந்த நெற்றியுடையவராக மக்களைக் காணலாம். தனியூராகப் பிரகடனம் செய்து ஐம்பது ஆண்டுகள் பூர்த்தியாவது குறித்து வெளியிடப்படும் ஆவண மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதையிட்டு மிகவும் அக மகிழ்கிறேன். இத் திருப்தியில் எனது அண்ணி அமரர் ஞானலஷ்மி ஸ்ரீஸ்கந்த மூர்த்தி அவர்களின் இல்லத்தை சிவபூமி ஆச்சிரமம் ஆக்கி எமது சிவபூமி அறக்கட்டளை நிறுவனம் பணியாற்றி வருவதையிட்டு பெருமை கொள்கிறேன். யாழ் மண்ணில் இருந்து முதலாவது நாசா விண்வெளி ஆராட்ச்சி விஞ்ஞானியைத் தந்த பெருமை குப்பிழான் கிராமத்துக்குரியது. உயர்.திரு .வைத்திலிங்கம் துரைசாமி அவர்களை அமெரிக்காவில் சந்திக்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. அமெரிக்காவில் வாழும் தமிழர்கள் அவரைப்பற்றி பெருமையாக பேசுவார்கள். மெய்ஞானிகளையும், விஞ்ஞானிகளையும் தந்த குப்பிழான் சூரிய சந்திரர் உள்ளவரை சகல சிறப்புக்களுடன் மிளிர வாழ்த்துகிறேன். மலர் வெளியிட ஆக்கபூர்வமான பணியில் ஈடுபட்டு உழைக்கும் விக்கினேஸ்வரா மன்ற செயலாளர் திரு.நல்லதம்பி மோகனதாஸ் அவர்களின் ஆர்வத்துக்கு எனது நன்றி உரித்தாகுக.

கலாநிதி ஆறு. திருமுருகன்

(தெல்லிப்பளை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தான நிர்வாக சபைத்தலைவரும், சிவபூமி அறக்கட்டளை நிறுவனத்தின் தலைவரும், அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உபதலைவரும், இளைப்பாறிய ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் அதிபருமாகிய செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் அவர்கள் வழங்கிய ஆசிச் செய்தி)

குப்பிழான் என்னும் அழகிய கிராமம் தனியான நிர்வாக அமைப்பாக உருவாக்கப்பட்டு இவ்வாண்டு ஐம்பதாவது ஆண்டை வெற்றிகரமாக தாண்டுகிறது. குப்பிழான் கிராமமக்களின் முற்போக்கான சிந்தனையாளர்களாலும், புரட்சிகரமான செயற்பாட்டாலும் சுமார் அறுபத்தி மூன்று ஆண்டுகளுக்கு முன்னரே தமது கிராமத்துக்கான தனியான நிர்வாக அதிகாரங்கள் வேண்டுமென்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டவுடன் 1964ம் ஆண்டில் தனியான கிராமசேவகர் பிரிவாகவும் உருவாக்கப்பட்டது. இவ்வாறு இவர்களது கோரிக்கை நிறைவேறியமையானது. குப்பிழான் கிராம மக்களின் ஒற்றுமைக்கு சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்திருந்தது. தமிழர்களின் கலாச்சார மையமான யாழ்மாவட்டத்தில் மிகவும் செழிப்பான செம்மண் வளம் கொண்ட இக்கிராமம் எமது தேசத்தின் விவசாய பொருளாதாரத் துறையில் குறிப்பிடத்தக்களவு பங்களிப்பை வழங்கி வந்துள்ளது. ஆரம்பத்தில் விவசாயத் துறையில் தனித்துவமாக விளங்கிய இக்கிராமம் காலப்போக்கில் கல்வித்துறையிலும் தனக்கெனத் தனி இடத்தைப் பெற்றுக்கொண்டது. எம் உயிரினும் மேலான தமிழ் மொழியையும், தமிழர் தம் பண்பாட்டையும் வளர்த்தெடுப்பதில் அளப்பெரிய பங்காற்றிய பெரியோர்கள் இக்கிராமத்தில் வாழ்ந்து மறைந்துள்ளார்கள் .

தமிழ்ச் சமூகத்தின் சாபக்கேடாக விளங்கிய சாதிய அடக்குமுறை மற்றும் தீண்டாமை போன்ற அடிமைத்தனங்களுக்கு எதிராகப் போரட முற்பட்ட புரட்சிகரச் சிந்தனை மிக்க பெருமை மிக்க இளைஞர்களையும் பெற்றெடுத்த பெருமையை குப்பிழான் மண் கொண்டுள்ளது.

தனது தனிக்கிராமத்தின் தனித்துவத்தை பேணியவாறு விவசாயம், கல்வி உட்பட அனைத்துத் துறைகளிலும் வீறுநடை போடும் குப்பிழான் கிராமம் மேன்மேலும் வளர்ச்சியடைந்து எமது தமிழ்த் தேசத்தின் வளர்ச்சிக்கும் பெரும்பங்காற்ற வேண்டும் என கிராமத்ததையும், கிராமத்து மக்களையும் வாழ்த்துகிறேன்.

செ.கஜேந்திரன்
பொதுச்செயலாளர்
தமிழ் தேசிய மக்கள் முன்னணி
(முன்னால் பராளுமன்ற உறுப்பினர்)

## வாழ்த்துரை

குப்பிழான் தனிக்கிராமமாகி ஐம்பது ஆண்டுகள் கடந்து விட்டன. பிரித்தானியாவில் இயங்கும் குப்பிழான் விக்கினேஸ்வரா மன்றம் இன்று அதன் பொன்விழாவை இலண்டனில் சிறப்பாகக் கொண்டாடுகிறது.

தனிப் பண்பும் பாரம்பரியமும் கொண்ட அழகிய கிராமம் குப்பிழான். ஆனால் அது ஐம்பது ஆண்டுகளின் முன்னால் தனித்துவம் இன்றி நிர்வாக முறையில் மூன்றாக பிரிக்கப்பட்டு ஆட்சி செய்யப்பட்டு வந்தது. ஏழாலை , மயிலிட்டி , வடக்குப் புன்னாலைக்கட்டுவன் ஆகிய கிராமங்களுடன் இணைக்கப்பட்டு அவற்றின் கிராமசேவகரின் கீழ் நிர்வகிக்கப்பட்டது. உடுவில் , கோப்பாய் , காங்கேசன் துறை ஆகிய தேர்தல் தொகுதிகளின் கீழ் பிரிந்திருந்தது. இவற்றால் குப்பிழானின் வளமும் வளர்ச்சியும் பாதிக்கபட்டன.

இதனை உணர்ந்த கிராமத்துப் பெருமக்கள் சிலரின் பெருமுயற்சியால் 1964 ஆம் ஆண்டில் குப்பிழான் தனிக்கிராமமாக அங்கீகாரம் பெற்றது. கிராமத்தின் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஆண்டு இது.

குப்பிழான் தனிக்கிராமமாகி ஐம்பது ஆண்டுகள் கடந்து இன்று பொன்விழாக் காணுகிறது. புலம் பெயர் நாட்டில் வாழ் குப்பிழான் இளைஞர்களும், மக்களும் இதனை மகிழ்ச்சியுடன் இன்று பெருவிழாவாக இலண்டனில் கொண்டாடுகின்றனர்.

பொன் விழாவும் விழா மலரும் சிறந்து விளங்கவும், குப்பிழான் கிராமம் வளமுடன் செழிக்கவும், மக்கள் நலமுடன் நீடுழி வாழவும் விநாயகப் பெருமானின் திருவருளை வேண்டி வாழ்த்துகின்றோம்.

அன்பன்

சித்தாந்தரத்தினம் , கலாநிதி க. கணேசலிங்கம்


## செம்மண்ணின் மைந்தரெல்லாம் கைகோர்த்து நிற்க வேண்டும்

பொன்விழாவோடு எம்மண் இன்னும் செழிக்க வேண்டும் செம்மண்ணின் மைந்தரெல்லாம் கைகோர்த்து நிற்க வேண்டும் குப்பிழான் தனிப்பெருங் கிராமமாகி ஆண்டுகள் ஐம்பதைத் தொட்டு நிற்கின்றது. பல சமூக நலன் விரும்பிகளின் அயராத பணியினால் தடைகளையும் இடர்களையும் தாண்டி இன்று பொன் விழாக் காணுகிறது.

அன்று சுந்தரசர்மா ஐயா மரத்தடியில் ஆரம்பித்து வைத்த ஆரம்பக் கல்வி இன்று பெரும் பாடசாலையாக மலர்ந்து நிற்கின்றது. சிறியதொரு வாசிகசாலையாக ஆரம்பிக்கப்பட்ட விக்கினேஸ்வரா சனசமூக நிலையம் இன்று இரு மாடிகளைக் கொண்ட நவீன சனசமூகமாக நிலையமாகக் கட்டப்பட்டுக் கொண்டு இருக்கின்றது. விளையாட்டு மைதானம் மாவட்டத்திலே சிறப்பான முறையில் அமைக்கப்பட்டுள்ளது. கோயில்கள் சிறந்த பராமரிப்புடன் கூடிய பக்தி கூடங்களாக விளங்குகின்றன. கிராமத்து மயானம் அலங்கார வளைவுகளுடன் எடுப்பாய் நிற்கின்றது.

திருவிழாக்கள், விளையாட்டுப் போட்டிகள் நாளாந்த சந்தியடி ஒன்று கூடல்கள் என்று கலகலப்பாய் இருந்த எமது கிராமம் கொடிய போர் வந்த போது கல் விழுந்த குளவிக் கூடாகிப் போனது. ஊரவர்கள் உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் தஞ்சமடைந்தனர். ஆயினும் அவர் தம் செம்மண் மீது கொண்ட பற்றுச் சற்றேனும் குறையவில்லை. அவர்களது செம்மண் மீதான தீராத பற்றே இன்று இயல்பு நிலைக்கு திரும்பும் எம் கிராமத்தின் அதீத வளர்ச்சிக்கு அடிப்படை. செம்மண்ணின் பொன்விழாவைப் பெருவிழாவாய் கொண்டாடும் பிரித்தானிய குப்பிழான் விக்கினேஸ்வரா மன்றத்திற்கு சக மன்றம் என்ற வகையில் மனமார்ந்த வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதில் எமது மன்றம் பேருவகை அடைகிறது. பொன்விழா மிகச் சிறப்பாக நடைபெற எமது நல்லாசிகள் பொன் விழாவோடு எம்மண் இன்னும் செழிக்க வேண்டும் செம்மண்ணின் மைந்தரெல்லாம் கைகோர்த்து நிற்க வேண்டும்.

குப்பிழான் விக்கினேஸ்வரா மக்கள் மன்றம் கனடா



மின்னொளி கிடையாத நாளில்
லாம்பொளிதுணையாய் கொண்டு
காரிருன் பாதையூடாய்
கால்நடையாய் நீங்கள் சென்று
அறிவுடைப் பெரியார் பலரை
ஆர்வமுடன் கலந்துபேசி
எம் கிராம விடியலை நோக்கி
திட்டங்கள் பலவும் தீட்டி
வளர்ச்சிப்பாதையிலே
எம் கிராமம் வாழ வைத்த நாயகனே
என்றென்றும் நல் வாழி எல்லோரும் வாழ்த்துகின்றோம்.

கிராமம் கண்ட தவப்புதல்வர்
பொறியியலாளர் கணேசலிங்கம்
அவர் தம் துணைகொண்டீர் மின்சாரம் தந்து நின்றீர்
கல்வி பயிலும் மாணவரும்
கடும் உழைப்பு விவசாயிகளும்
இளமை பொங்கும் இளையோரும்
முதுமையுறு முதியோர்களும்
அனைவரும் மகிழ்வுறவே ஆக்கமதை செய்து நின்றீர்
நல்வாழ்வு வாழ்ந்திடவே அவர் எல்லாம் வாழ்த்தி நிற்ப்பார்.

சனசமூக நிலையம் என்னும்

கூட்டுறவுச் சங்கமென்றும்
கிராமவிருத்திச் சங்கமென்றும்
பஞ்சாயத்துச் சபை என்றும்
எங்கெங்கு பொதுமன்றம்
அங்கங்கு நின் உருவம்
அல்லும் பகலும் ஊர் நினைவு கொண்ட அகம்
ஏற்றம் பல தீரதய்யா எடுத்துரைக்க வார்த்தையில்லை
அன்பு கொண்டு வாழ்த்துகின்றோம்
என்றென்றும் நல் வாழியவே

உம் சேவையில் நேர் வழியும்
நேர்மையதுவும்
கண்டு நின்றேன்
எம் கிராமச் சரித்திரத்தில் நாயகனாய் மிளிர்ந்து நின்றீர்
உம் சேவையில் அன்றிணைந்தேன்
அதனால் இன்று பெருமையுற்றேன்
என்றென்றும் நல வாழ நான் இங்கு வாழ்த்துகின்றேன்

உம் ஆற்றல் அறிந்து பலர்
உமக்கு துணையாக நின்றார்
பிரிந்து விட்ட துரைசிங்கம் , நல்லையா முத்துக்குமாரு
கு.கணேஸ் , வைரநாதன், செல்லையா போன்ற பலர்
இடம் பெயர்ந்து வாழ்கின்ற பாலன் நடனம் போன்ற
உம் அயலில் இருக்கின்ற
பொன்னம்பலம், நடராசா, போன்ற சிலர்
அனைவருக்கும் தருமண்ணை
ஆகி நின்றீர் வாழ்த்துகிறேன்

நாற்புறமும் எம் கிராமம் மறு ஊரில் சிதைந்திணைய
எல்லைகள் சீராக்கி தனிக்கிராமம் தோற்றுவிக்க
ஆற்றல் உள்ள பலரையும் ஆர்வமுடன் இணைத்து நின்று
ஆக்கித் தந்தீர் தனிக்கிராமம் குப்பிழான்
அது பொன் கிராமம்

குதூகலமாய் பொன்விழா எம்மக்கள் காணும் வேளை
முன் அமர்ந்து மேன்மையுற வாய்ப்புத் தந்தீர் நன்றி ஐயா
நூறாண்டு நலம் வாழ நாம் எல்லாம் வாழ்த்துகிறோம் .

தனிக்கிராம மகுடமாய் மைதானம் வேண்டி நின்றார்
பல எதிர்ப்புத் தாண்டி நிற்கும்
வல்லமையை சேர்த்து நின்றார்
பகலிரவாய் பல பனைகள் தீயிட்டு சாய்த்து நின்றார்

அவரிடையே பலரை இழந்து நாம் இங்கு நின்றாலும்
தனிக்கிராமம் தந்து நின்ற தர்மரையா காண்கையில்
கவலையெல்லாம் பறக்குதய்யா நீடுழி வாழுமையா

திரிபுரை , ராசதுரை , சொன்சோதி ,
சிவசோதி, துரை, மணியம் போன்ற பலர்
எம்மை பிரிந்து விட்டார்
ஞானம் ,சோதி, பஞ்சன், குஞ்சன், போன்றோர் – வாழ்கின்றனர்
நந்தன் , நாதன் ,பாலன் ,குஞ்சன் போன்றோர்
புலம்பெயர்ந்தே இருக்கின்றார்கள்
எம் ஊரில் வாழ்பவர்கள் ஒரு சிலர் தான் ஐயா
தனிக்கிராமம் தோற்றுவித்த நாயகனை அவர் மறக்கார்
அவர் சார்பில் நல வாழ்வு வாழ்ந்தடவே வாழ்த்துகின்றேன்

கிடைத்து விட்ட மைதானம்
சிறப்புற அமைந்திடவே
முதல் அடி எடுத்து வைத்தான் அப்பன் .அவன் என் நண்பன்
சகோதரன் பெயராலே தொடர்ந்து நின்றான் மோகன் அவன்
இப்படியே தொடர்ந்து நின்றால் புலம் பெயர்ந்த எம் மக்கள்
கண்டிடுவோம் மைதான ஸ்ரேடியம் வெகுவிரைவில்
கண்டாலும் வாழ்த்தி நிற்பார் தனிக்கிராம
நாயகனை தருமண்ணை

இ.சி.தெட்சணாமூர்த்தி




குப்பிளான் விக்னேஸ்வரா மன்றம்
KUPPILAN VIGNESWARA MANDRAM
UNITED KINGDOM




குப்பிளான் விக்னேஸ்வரா மன்றம்
KUPPILAN VIGNESWARA MANDRAM
UNITED KINGDOM





0208 5520777

www.sathiyams.com

sathiyams

...a tasteful promise





Classical Indian & Chinese Restaurant

& Banquenting

HALAL

Home Delivery Available

**Opening Hours**

Monday - Saturday
11am to 11.30pm
Sundays
12 Noon to 11pm

150 seats Hall 1
&
50 seats Hall 2

Function Hall
Party Orders
Outdoor catering

## Priya Restauramt

Finest Srilankan nad Indian Cuisine



209 High Street, Eastham, London E6 1JG

020 8471 5552 I 079 9055 3960

easthampriya@gmail.com

# Wisheshestra
## Solutions Limited

**"Solutions for your WISHES to come true"**

PC, LAPTOP & APPLE MAC REPAIRS
BUSINESS MARKETING
NETWORKING & WEB DESIGNING
SECURITY SYSTEMS
GCSE , A/LEVEL & 11+ CLASSES

wisheshestra natyalayam



www.wisheshestra.com
sales wisheshestra.com
056 036 444 44



AKSHYSS EVENTS

# Akshyss Events Management

Manavarai | Mandaps | Wedding Stage Decor | Puberty Ceremony
Receptions | Mendhi Decor | Marquee | Themed Events | Corporate Events





AKSHIYA BANQUET
Opp 14, Southend Road
East Ham E6 2AA

**HALL AVAILABLE FOR HIRE**
**Seating Capacity 200-250**

T: 0208 477 1356
M: 079 5141 8145

Web: www.akshyisevent.com
E-mail: akshyiseventsm@hotmail.com

Ratna & Co. Solicitors
Est. Since 1989

Tel: 020 8470 8818
Fax: 020 8475 0131
Email:
ratna@ratna.co.uk

## Conveyancing

RESIDENTIAL CONVEYANCING, COMMERCIAL CONVEYANCING
RE-MORTGAGES, RIGHT TO BUY PURCHASES

## Civil Litigation

LANDLORD & TENANT DISPUTES, DEBT CLAIMS, TRAFFIC OFFENCES, CIVIL CLAIMS, CIVIL DISPUTES
MAGISTRATES COURT/COUNTY COURT/HIGH COURT CLAIMS AND DEFENCES

## Immigration & Asylum

IMMIGRATION APPEALS-ASYLUM LAW
EU LAW-APPLICATIONS UNDER POINT BASED SYSTEM
BAIL AND DETENTION MATTERS-NATIONALITY LAW
HUMAN RIGHTS LAW-SPONSORSHIP DECLARATIONS
VISA REFUSAL AND APPEALS-VISA APPLICATIONS

First Floor, 169A High Street North, East Ham, London,
E6 1JB

தரம் நிரந்தரம்!

# GANESHA JEWELS

*Eastham*

பொன் உருக்கல் இலவசம்

நகை சேமிப்புத்
திட்டம் ஆரம்பமாகியுள்ளது

திருத்த வேலைகள் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும்.
நவீன டிசைன்களை புதிய சிந்தனையுடன் வடிவமைப்பவர்கள்
பழைய தங்கம் நியாயமான விலைக்கு வாங்கப்படும்
குறித்த சில ஓடர்கள் ஒரே நாளில் செய்து தரப்படும்.



*Build your dreams on solid gold*

கணேசா நகையகம்

020 8470 7844



330 HIGH STREET NORTH, EASTHAM E12 6PH
TEL: 020 8470 7844 I EMAIL: GANESHAJEWELS@HOTMAIL.CO.UK

## புத்துணர்ச்சியை ஊட்டும் விழா

குப்பிழான் கிராமத்தின் பொன் விழாவையொட்டி பிரித்தானியா மன்றம் வெளியீடும் மலருக்கான இவ் வாழ்த்துச் செய்தியை வழங்குவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

1964 ம் ஆண்டில் தனிக்கிராமமான எங்கள் கிராமம் பல துறைகளிலும் வீறுநடை போட்டு வளர்ச்சி அடைந்து வருகின்றது. இவ்வளர்ச்சியில் புலம் பெயர் கிராமத்தவரின் பங்கு அளப்பரியது. புலம் பெயர் நாடுகளில் வாழ்கின்ற எங்கள் கிராமத்தவரின் அடுத்த பரம்பரையினர் தங்களின் வேர்களை இனம், மொழி, கலாச்சாரம் மறவாதிருக்க இத்தகைய விழாக்கள் உதவும். மலர் வெளியீடுகள் அவர்களுக்கு புத்துணர்ச்சியை ஊட்டும். அந்த வகையில் இந்த விழாவும் மலர் வெளியிடும் சிறப்பாக பயனுள்ளதாக அமைய இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

குப்பிழான் ஐ. சண்முகன்



## செம்மண் கிராமம்

குக்கிராமம்
காதுகள் அடைத்துக்கொண்ட
அப்பாவிகள்
தூங்கிய மண்
நான்கு பக்கமும்
கைகள் கட்டப்பட்ட
முடக்கப்பட்ட
மைந்தர்கள்
கேட்க நாதியில்லை
கேட்டுப் போனால்
நீதி இல்லை
எல்லா இடங்களிலும்
பூத்து குலுங்கியது
செம்மண்
கிராமத்தில் மட்டும்
கண்கள் மட்டும்
உடைந்து ஓடியது
யார் துடைப்பார் ?
விடுதலை
கதவை யார் திறப்பார் ?
கனவுகள் மட்டும்
கானல் ஆகியது !

வீறு கொண்ட
மண்ணின் மைந்தர்கள்
தேடித்தந்த
விடுதலை தனிக்கிராமம்
ஆனது
தலைநிமிர்ந்து நின்றது
அந்த கிராமத்துக்கு
ஐம்பதாவது சுதந்திர
பொன்விழா
காணட்டும் காணட்டும்
பொன்விழா பவள விழா
என்று பல விழாக்கள்
காணட்டும்
எங்கள் கண்களும்
அதனை பார்க்கட்டும்
வாழ்க செம்மண்

## செம்மண் கிராமத்துக்கு பொன் விழா

இலங்கை தமிழனை பெருமை கொள்ள வைக்கும் மண்ணுக்கு பொன்விழா. உள்நாட்டுக்குள்ளே ஒரே இனத்துக்குள்ளே ஒடுக்கப்பட்டு கிடந்த மண் ஆயுள் பெற்று ஐம்பது ஆண்டுகள் கடக்கப் போகின்றது. அதற்கு விழா எடுத்து முடி சூட்டிக் கொள்ளும் சொந்த மண்ணின் மைந்தர்கள் உண்மையில் எங்கும் நடந்திராத ஒரு அதிசயம். தமிழன் காலடி வைத்த இடங்கள் எல்லாமே பொன்னாக மாற்றிக் காட்டியவன் எங்கு சென்றாலுமே அவனுக்கு ஒரு முத்திரை பதித்து தமிழன் பெருமைகளை உலகறியச் செய்தவன் என்றால் அதற்கு விளக்கம் தேவை இல்லை. இன்று புலம் பெயர்ந் நாடுகளில் கூட அவன் பெருமைகளை உலகறியும். அதற்கு வார்த்தைகள் இல்லை. ஆனால் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் சொந்த மண்ணில் கைகள் கட்டப்பட்டு மனத்தால் நசுக்கப்பட்டு மூச்சு விடவே முடியாத ஒரு துர்பாக்கிய நிலையில் இருந்து அந்த மண்ணை தங்கள் சொந்தக் கிராமத்தை கட்டி எழுப்ப வேண்டும் என்று மனதால், நுட்பத்தால் , போராடி அந்த மண்ணுக்கு ஒரு மகுடம் சூட்டி உள்ளார்கள். என்றால் அந்த ஐம்பது ஆண்டு பூர்த்தியை கொண்டாடாமல் எதனை கொண்டாட முடியும்? அப்படிப்பட்டவர்களை வாழ்த்தாமல் யாரை வாழ்த்த முடியும்?

பிற்படுத்தப்பட்ட கிராமம் இன்று உலகமே வியந்து பார்த்து பெயர் சொல்லக் கூடிய அறிவு சார்ந்தவர்களை உருவாக்கிய கிராமம் அப்படிப்பட்ட கிராமத்தை உருவாக்க எத்தனை மனிதர்கள் மனத்தால் , உள்ளத்தால் , வடுக்களால், கண்ணீரால் வாழ்ந்து இருப்பார்கள். என்று எண்ணிப்பார்க்கும் பொழுது இதயம் கொஞ்சம் அசைவற்று மீண்டும் துடிப்பை ஏற்ப்படுத்துகின்றது. ஒரு வீட்டை கட்டி முடிப்பதற்கே மயக்கம் கொள்ள வைத்து விடும். ஆனால் தன்மான உணர்வோடு ஒரு கிராமத்தை சுய கௌரவத்தோடு கட்டி எழுப்புவது என்பது சாதரண ஒரு விடயமா? செம்மண் கிராமத்தில் நடத்தி இருக்கின்றார்கள். அந்த செம்மண்ணின் மைந்தர்கள் உண்மையில் உணர்வு மட்டுமே இந்த இடத்தில் சம்பாணம் கட்டி வாழ்ந்து இருக்கின்றது. தங்களுக்கு ஒரு சுய கௌரவம். அதனை அன்றே அதாவது ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னாடியே அவர்கள் போராடி வென்று விட்டார்கள். அகிம்சையால் இன்று ஐம்பதாண்டு அறுவடை

செய்கின்றார்கள். உள்ளம் பூரிக்கின்றது.

இந்த மக்களில் அரைவாசிக்கு மேல் ஏன் அதற்கு மேல் கூட என்று சொல்லலாம். புலம் பெயர்ந்து விட்டார்கள். புலம் பெயர்ந்தவர்கள் அப்படியே போய் வாழ்ந்து இருக்கலாம். புலம் பெயர்ந்த தேசங்களில் இவர்களுக்கு என்ன தான் குறை? ஆனால் அவர்கள் உண்மையில் சொந்த மண்ணை நேசித்தார்கள். அந்த மண்ணுக்கு என்றும் உரமாக இருக்க வேண்டும் என்று உள்ளத்தால் யோசித்தார்கள். மண்ணின் பெயரைக் கொண்டு மன்றம் தொடங்கினார்கள். அந்த மன்றத்தின் பெயரால் இன்று பல எண்ணங்களை மண்ணில் விதைத்து மண்ணை பொழிவாக்கிக் கொண்டு இருக்கின்றார்கள் என்றால் அவர்களுடைய எண்ணம் எப்பொழுதும் அவர்கள் மண் மீது இருக்கின்ற பற்று என்பதற்கு இதனை விட என்ன சாட்சி வேண்டும்? இதற்கு ஒரு விளக்கம் வேண்டுமா?

இந்த மண்ணுக்காக வாழ்ந்தவர்களுக்கு விழா எடுக்க வேண்டும் அவர்கள் அப்படி நினைத்ததே உண்மையில் அவர்கள் விசுவாசத்தைக் காட்டுகின்றது. அவர்களின் கௌரவத்தைக் காட்டுகின்றது. பண்பைக்காட்டுகின்றது, பணிவைக்காட்டுகின்றது. இப்படி நிறையவே சொல்லிக்கொண்டு போகலாம். எல்லா நல்ல விடயங்களும் அவர்களுக்கு பொருந்துகின்றது. எதுவுமே கிடைக்கவில்லை என்று தலையில் கையை வைத்துக்கொண்டு இருப்பார்கள். உண்மையில் இவர்களிடமிருந்து பாடம் கற்க வேண்டும் என்று என் எண்ணக் கருவில் தோன்றுகின்றது. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் அவர்கள் பட்ட கஸ்டங்களை நினைத்து அந்த நேரத்தில் மண்ணை விட்டு புலம்பெயர்ந்து பக்கத்து கிராமங்களில் குடியேறி இருந்தால் யார் தடுத்து இருப்பார்கள்? யார் இவர்களை கவனித்து இருப்பார்கள்? இன்று இவர்களை பற்றி யார் பேசி இருப்பார்கள்? ஆனால் அன்றே அவர்கள் போரட்டத்தை ஆரம்பித்து விட்டார்கள். சுதந்திரப் போராட்டத்தை. தங்கள் கிராமத்துக்கு தனி சுதந்திரம் வேண்டும் என்று அப்பொழுதே போராடி அன்றே வென்று விட்டார்கள் அந்த சுதந்திர மண்ணுக்கு இன்று ஐம்பதாவது பிறந்தநாள் அதனை பெற்று எடுத்தவர்களுக்கு விருது. அவர்களுக்கு விருது இல்லாமல் யாருக்கு தான் கொடுக்க முடியும். ஐம்பது இல்லை பல்லாயிரம் ஆண்டுகள் விழா எடுக்கவேண்டும் சுதந்திர பூமியாக என்றும் அந்த மண் வாழ வேண்டும் என்று வாழ்த்த வயதில்லை வணங்குகின்றேன்

கவிஞர்
இராஜேந்திரகுமார்

## குப்பிழான் பண்பாட்டின் தொட்டில்

ஊர் என்பது ஒருநாட்டின் மிகவும் அடிப்படையாக அமைந்த அமைப்பாகும். ஆயின் அந்த ஊரின் அடித்தளத்திலிருந்தே நாடு கட்டியெழுப்பப்படுகின்றது. மக்கள் செறிந்த வாழ்விடங்களாகவும் உற்பத்திப் பொருளாதாரத்தின் மையப்பகுதிகளாகவும் பண்பாட்டின் தொட்டில்களாகவும் அவை விளங்கின. நகர நாகரிகம் விரிவடைந்த இன்றைய சூழலிலும் ஊர்களின் தனித்தன்மை பல இடங்களிலும் மாறாதிருப்பது மகிழ்ச்சிக்குரியது.

குப்பிழான் என்ற வடபுலத்துச் சிற்றூர் ஒன்று தனித்தியங்கத் தொடங்கியதன் பொன்விழாவைக் கொண்டாடுவது மகிழ்ச்சியானது . குரும்பசிட்டி, ஏழாலை, புன்னாலைக்கட்டுவன் என்ற கிராமங்களில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டு தனக்கான தனித்துவத்தை வளர்த்தெடுத்து அது நிலைத்து நிற்கின்றது. உழைப்பாளிகள், கல்விமான்கள், கலைஞர்கள் எனப்பல வகையினர் இம்மண்ணிற் பிறந்தார்கள். காசிவாசி செந்திநாதையர் பிறந்த ஊர் என்றால் அதன் பெருமையை கூறவேண்டியது இல்லை. அது மாத்திரமன்று அந்நியமதமெதுவும் கால் வைக்க முடியாத கட்டிறுக்கமான சைவர்கள் வாழும் பகுதியும் இது.

தாம் பிறந்த மண்ணை திரைகடல் ஓடித் திரவியம் தேடமுயன்றோர் நீள நினைந்து அம் மண் தனித்துவம் பெற்ற பொன் விழா ஆண்டை கொண்டாடுவது மிகவும் போற்றத்தக்கதாகும். அந்த வகையில் இம் முயற்சியில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் எனது பாராட்டுக்கள். பெற்ற தாயை பாராட்டுவது போல பெற்ற மண்ணை மறவாத சகலருக்கும் என் வாழ்த்துக்கள்

பேராசிரியர் வ.மகேஸ்வரன்

Prof.V.MaheswaranB.A(Hons), M.Phil,Phd,PG.Dip.in Temple Art



இளைய எண்ணங்களும் இலட்சியங்களாகட்டும்

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனிசிறந்ததே" என்பது மண்ணை நேசித்த மாண்புமிகு மனிதனின் குறியீடு நாம் எங்கே பிறந்தோமோ அந்த மண்ணுக்கும் அதன் வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருக்க வேண்டும். ஒவ்வொரு மனிதனுக்கும் ஓர் இலச்சியம் உண்டு. மண்ணுக்கும், மக்களுக்கும் ஏதாவது செய்ய வேண்டும் என்ற கடமை உண்டு. அந்த இலச்சியமும் அதற்கான கடமையும் வெற்றிபெறும் வரை அயராது உழைப்பதையே இலட்ச்சிய நோக்கு என்கின்றோம். அந்த உழைப்பை மையமாகக் கொண்டிருப்பவர்கள் தங்களுடைய இலட்சியத்திலே வெற்றி பெற முடியும். ஒவ்வொரு விடயங்களையும் மனிதன் சிந்திக்கிறான். ஆனால் அதனைச் செயல்படுத்த முடியாதபோது மனமுடைந்து மௌனமாகி விடுகின்றான். இதனையே செந்நாப்புலவன் திருவள்ளுவர் "எண்ணித் துணிக்கருமம் துணிந்த பின்எண்ணுவம் என்பது இழுக்கு" என்கின்றார். அதனால் எடுக்கின்ற எந்தகாரியமாக இருந்தாலும் துணிந்த பின்பு எதற்கும் அஞ்சிவிடக்கூடாது. ஆயிரம் கைகள் மறைத்து நின்றாலும் ஆதவன் மறைவது இல்லை. அதைப்போல ஆயிரம் கைகள் இணைந்து நின்றால் ஆதரவும் குறைவதில்லை. எனவே தடைகளை எண்ணித் தளர்ந்து நிற்பவர்கள் உண்மையான இலட்சியவாதியாக இருக்கவே முடியாது. மண்ணை நேசிப்பவர்கள் மக்களை நேசிக்கின்றார்கள். மக்களை நேசிப்பவர்கள் மனிதத்தைப் பகிர்ந்து கொள்ளுகிறார்கள். மனிதத்தைப் பகிர்ந்து கொள்பவர்கள் உறுதியுடையவர்களாக இருக்கின்றார்கள். அந்த

உறுதியுடையோர்களே ஓயாமல் உழைக்கின்றார்கள். அதனால் "மனதில் உறுதி வேண்டும் வாக்கினிலே இனிமை வேண்டும் நினைவு நல்லது வேண்டும் நீங்கிய பொருள் கைபட வேண்டும்" என்கிறார் பாரதியார். எனவே நல்ல எண்ணங்களும் நல்ல சிந்தனைகளும் நாட்டை வளர்க்கின்ற ஆயுதங்கள். உலகெங்கும் பரந்து வாழும் நாம் நம் மண்ணுக்காக என்ன செய்தோம் ? என்ற எண்ணத்தை நாமே இரைமீட்டுக் கொள்ளல் வேண்டும். தனக்காக மட்டுமல்லாமல் தன் எதிர்காலச் சந்ததியும் தலை நிமிர்ந்து வாழவேண்டும் என்று சிந்தித்தவர்களை மண்ணின் சொத்துக்களாகக் கொண்டிருக்கின்றோம். அவர்களுடைய பெயரால் மண்ணின் பெருமையை நற்பெருமையாக்கிக் கொள்கின்றோம். உளகளாவிய ரீதியிலே பெருமைகளைக் கொண்டிருக்கின்றோம். இந்தியாவிலே படித்தவர்கள் மத்தியிலே வேற்று மொழியிலக்கியங்களையும் ஆராய்ந்து பிரமசூத்திரத்தைப் பிழையின்றிப் பதிக்கும் ஆற்றலும் அறிவும் காசிவாசி செந்திநாதையருக்கு இருந்தது என்றால் அங்கே தான் எமது தேசம் தலை நிமிர்ந்து நிற்கின்றது.

உலகமெலாம் இருக்கின்ற ஒவ்வொரு குடிமகனின் கைகளிளும் இந்தச் செய்திகள் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டியவை. அதனால் என்போன்ற படித்த இளைஞர்களின் பார்வையிலே இவற்றைக் கொண்டு வரவேண்டும். தாய்மொழி, பண்பாடு, கலை, கலாச்சாரம் நாகரீகம், என்பவற்றிலே நம்பிக்கை கொள்ளல் வேண்டும். தமிழர்கள் என்ற தடயங்களை மறைத்து நாகரீகச் சாயங்களைப் பூசிக்கொள்ளும் யாராலும் எமது மண்ணின் பெருமைகளை வளர்த்திட முடியாது. கற்ற கல்வி நமது வாழ்வுக்கும் வசதிக்கும் ஊன்றுகோலாக இருக்கலாம். ஆனால் எமது வரலாற்றை அழித்து விடுகின்ற ஆயுதமாக இருந்துவிடக்கூடாது. ஒற்றுமையும் புரிந்துணர்வும் ஒவ்வொரு மனிதனையும் இலட்சியவாதியவே மாற்றும். தமிழர் விழுமியங்களின் வரலாற்றுப் பதிவுகளுக்குச் சொந்தக்காரர்களாவது எப்போது? இளைய தலைமுறைகளின் எண்ணங்களுக்கும் இடமளித்து எடுக்கின்ற காரியங்களைப் பகிர்ந்தளிக்க வேண்டும். ஒவ்வொருவரும் ஏதோ ஒரு வகையில் தன் கைகளை இணைத்துக் கொள்ளும்போது சுமைகள் இலகுவாகின்றன. அரசியல் வரலாறுகளோடு சம்பந்தப்பட்டிருக்கிறது நமது கிராமம்.

ஆனால் எமது கிராமத்திற்கு அங்கீகாரம் கிடைத்த ஐம்பதாவது பொன்விழாவில் நாம் எத்தனை இளைஞர்களை உள்வாங்கியிருக்கின்றோம்? குப்பிழான் என்ற பெயரையே தெரியாமல் இன்னும் எத்தனையோ வாரிசுகள் வளர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அகில உலகமெலாம் பரந்து வாழும் ஒவ்வொரு இளைஞர்களும், யுவதிகளும் தங்களுடைய படைப்புக்களால், பங்களிப்புக்களால், கல்வி, அரசியல், பொருளாதார வளங்களால் சிதறாத சிந்தனைகளை முழுமைப்படுத்தி எதிர்காலச் சிந்தனைகளின் சிற்பிகளாக கைகோர்த்துக் கொண்டால் நமது இலட்சியங்கள் இலகுவாக வெற்றியடையும் என்பதில் எவ்விதமான சந்தேகங்களும் இல்லை. பரந்து வாழும் உலகப்பரப்பிலே தாய்மொழிச் சிந்தனைகளால் வளரும் சமூதாயத்தை வளப்படுத்தி "தமிழ் எங்கள் பேச்சு தமிழ் எங்கள் மூச்சு" என்ற இலட்சியசுடர்களை வழிகாட்டும் கலங்கரை விளக்குகளாக்கி புதிய விதியொன்றைப் புரட்சியுடன் படைக்க ஒன்றுபடவேண்டும். அதனால்


**வாருங்கள் வருங்காலத் தோழர்களே**
**சைவமும் தமிழும் தழைத்தோங்க வேண்டும்.**
**தன்மானம் இலட்சியம் வெற்றி பெறல் வேண்டும்.**
**இல்லாத மனிதர்களும் வாழவேண்டும்.**
**எதிர்காலம் ஒளிமயமாய் மலரவேண்டும்.**
**கல்லாத சிறுவர்களும் கற்க வேண்டும்.**
**கல்வியும் கலைகளும் காவியம் ஆகவேண்டும்.**
**சொல்லாத மனிதர்களும் நம் பெருமை சொல்ல வேண்டும்**
**சுதந்திரமாய் நாம் மிளிர வேண்டும்.**
**ஒன்று பட்டு உழைப்பவர்களுக்கு கலக்கமில்லை.**
**உறுதியுள்ள மானிடனே நீதான் ஒருதாய் பிள்ளை.**
**நன்றியுடன் கரங்களை இணைத்தால் வெற்றி.**
**நாளைய உலகதிற்கும் நீதான் மகாசக்தி.**

எனவே இலட்சியங்கள் வெல்ல, வரலாறு வழிகாட்ட, கரங்களை இணைத்துக்கொண்டு கடமைகளை செய்வோம் வாருங்கள். எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத புகழ் என்று சங்கே முழங்கு

நன்றியுடன்

கஜாணனன் சதானந்தன்
(கணக்கியல் துறைப்பட்டதாரி மாணவன்)

(BSC Hon )
Financial Mathematics...Bsc.(HON)
University of Greenwich.



## KUPPILAN - THE BOUNTIFUL VILLAGE

C.Kamalaharan

Like most others in the evening of their lives, Aiyathurai Annai too was forcefully 'uprooted', taken to Canada and settled there. The first thing a person does on arrival in Canada is to adapt him to the Canadian way of life. As it was the peak of the winter season, Aiyathurai Annai had to adopt the dress code of the season. Accordingly he was wrapped up in warm clothing while staying indoors and was dressed as an astronaut, with several layers of clothing, whenever he ventured out. In Canada both husband and wife have to work, to meet the domestic expenses and settle the mortgage bill. Aiyathurai Annai's son, Varan and daughter-in-law, Meena are no exceptions to this. In order to free themselves from the heavy work schedule during working days, they prepare wholesome food during weekends and stock it in the fridge. After they leave for work Aiyathurai Annai had to warm it in the microwave oven and have it for lunch. The veggie items such as burger, sandwich, pizza and pasta

served for dinner were nauseating for him. Also the sedentary life with the accumulation of fat deposits, made his tummy and buttocks bulge. Life was thus miserable for him. He longed for the life he had spent in his native place, Kuppilan.The mere mention of it was instantly turned down, by the stern look from his son. Being severely subjugated, he had to spend the time baby sitting and controlling the mischievous grand kids, with strict orders not to harm them. In addition, he did menial work according to his age and ability.

One day all of a sudden Aiyathurai Annai picked up courage and said, "I want to get back to Kuppilan." "Why do you want to go there," yelled the son. "We are providing everything, why this sudden urge to go," said the daughter-in-law, joining in the fray. "My B.P has shot up and my sugar level too has risen, owing to lack of physical exercise. Furthermore life is boring here and I am a virtual prisoner." "Here medical facilities are exceptionally good and they are free too. Your B.P and sugar level can be brought down to normal level, within a couple of days. Look here! Life is such in Canada; you have to live with it. Don't come to me with impracticable demands, understand!" said Varan in a severe tone. Unable to convince his son, Aiyathurai Annai retreated to his room, threw himself on bed and spent the whole night brooding.

A few weeks later one of their close relatives, Suppiah Annai while on a visit to them inquired, "Where is Aiyathurai Annai?" "There, he is in the room, living as a recluse" replied his son. "Why, is he not well?" "He is O.K, but he always bothers me to send him back to Kuppilan." "I am totally against it," said Varan. "Poor chap, what can he do other than remaining here idling, in this biting cold. Let him go and see his relatives and friends. The weather there will be more conducive for him and he will be in an upbeat mood, moving about freely. You may go after a year or so and bring him back." "That sounds nice," thought Varan. The following morning after discussing with his wife, he called his son and gave him a pleasant surprise, "Appah, you pack your bags, I'll check with the ticket agent and send you to Kuppilan next week. I'll come after a year or so and bring you back." Aiyathurai Annai's joy was boundless; the mere thought of returning to Kuppilan boosted his low morale. He said to himself, "First let me go, once there, I'll never ever dream of coming here."

On arrival in Jaffna town, his younger brother Sellathurai received him and took him in a car to Kuppilan. Aiyathurai Annai was impatient as the car fled through the busy streets. "Why Thamby, the driving is so fast?" "Annai see how our roads have been widened and carpeted." "Good

Thamby, those days the roads were very narrow as a result driving was very difficult owing to traffic jam. Turning at Mallakam junction the car had to slow down as the road was badly damaged, with lots of pot holes and trenches. It was a horrible journey, as the car jolted them, every time it negotiated the innumerable sharp bends, along the lengthy stretch through Erlalai. At Kuppilan junction, the car took a left turn went further and screeched to a halt at Sellathurai's gate. Sellathurai's children rushed to the gate shouting, "Periappah has come." Overwhelmed by their love and affection, Aiyathurai Annai hugged and kissed each one of them and presented the gifts he had brought for them. After a hearty dinner of Aiyathurai Annai's favourite 'kurakkan puddu' and chicken gravy, both the brothers sat outside, on a bench and went on talking, till late in the night. Later both of them retired to bed. But Aiyathurai Annai couldn't sleep, owing to the time difference and the mosquito menance.

Early in the morning Sellathurai called him, "Annai you didn't sleep last night!." "Yes Thamby I couldn't sleep due to the time difference and due to the mosquitoes feasting on me." "Here Annai, light this cigar" as he handed one. "Oh cigar from our tobacco!" saying so he lit it and began puffing out the smoke. "Thamby, in Canada I haven't seen anyone smoking cigars. They smoke only cigarettes." Just then his brother's wife brought him a tumbler of hot coffee. Sipping it, Aiyathurai Annai remarked, "Fine, a blend of coffee, coriander, and 'sukku' (dried ginger) and milk from your cow, the traditional drink prepared and served in every Tamil home. Tim Hortons and Starbucks are no match to this medicinal brew." While enjoying the refreshing and stimulating drink, Aiyathurai Annai inquired, "Thamby, I didn't hear the pealing of temple bells during the wee hours, why?" "Annai, as the temples in our village are in close proximity to the security zone, they are opened only after day break and our Pillaiyar temple's bell strikes only at 8.AM, announcing the commencement of the morning pooja,

The following morning Aiyathurai Annai after a shower, dressed in verty and shirt, set off to the Pillaiyar temple. On the way he was pleased to see most people who passed by, having a stretch of 'viputhi' on their forehead, a sight rarely could be seen in Canada. On arriving at the temple, he washed his feet and entered the premises in piety. He was happy to see devotees decently attired; men in verty and bare above the waist and women in sari and sudidhar and frocks. After circumambulating the inner courtyard, paying obeisance to the various deities enshrined around, he arrived in front, stood facing the sanctum and prayed to Lord Ganesha. Later to his heart's content, he applied a

stretch of 'viputhi' from one end of the forehead to the other, covering the entire area and left the temple.

Back at home he had 'thosai' and 'hand pounded' 'sambol' for breakfast and walked up to the library to read the local newspapers. He was pleased to see children in school uniform smartly going to school. On return he had a sumptuous lunch of boiled red rice, fresh vegetables obtained from his brother's farm, crab curry and 'rasam', a boiled mixture of spices. "It's awesome!" said he. In the evening with the hope of meeting his former friends, he went out on a stroll to the lively Kuppilan junction but to his utter dismay, there weren't any familiar faces. As he stood there an unknown person approached him and asked, "Who are you?" Aiyathurai Annai got irritated and shot back, "You are asking me, a son of this soil, who are you." "Sorry Annai, you seem to be a stranger that's why I..." "I am Aiyathurai, brother of Sellathurai, the cigar roller." "Oh! our Sellathurai Annai, just now only he passed this way towards his farm." As they spoke the rickety 770 bus arrived and someone alighting from it noticed Aiyathurai Annai and shouted, "Aiyathurai Annai!" Aiyathurai Annai was thrilled to see his friend Sinnathurai, after a long time. After the exchange of formalities both of them walked up to the farm, along the colony road. On the way Aiyathurai Annai was given 'flying' greetings by his classmate, Apputhurai who drove fast in his land master, waving his hand joyfully. Arriving at the far stretched farm, he was overwhelmed to see men, women and children actively engaged in farming. It's a common sight to see members of a family fully engaged in farming, to achieve a bumper harvest.The rich 'Chemman' (red soil) is a boon for our industrious farmers.

As they were enjoying the sights in the gentle breeze, a thunderous applause was heard from a particular direction. Aiyathurai Annai asked, "What is it Thamby?" "Annai, a football tournament is in progress, come we'll go and watch." Arriving there Aiyathurai Annai was amazed to see youths in coloured jerseys playing and the enthusiastic crowd cheering and jeering. "Annai, it's the concerted effort of our youths that made it possible to lay this beautiful playground."

The following morning Aiyathurai Annai asked his brother softly, "Thamby where can I get toddy?" "Don't worry Annai, Ratnam, the toddy tapper is at the top of one of our palmyra palms, tapping toddy. I'll tell him when he comes down." Later Ratnam arrived with the 'muddhy', the clay pot frothing with toddy. Tasting it from a tumbler Aiyathurai Annai commented, "What a delicious, nourishing and cheap drink this is! The expensive and injurious whisky, brandy and wine are

no match to this." A week later his desire of tasting 'odial kool' (a porridge prepared with a mixture of palmyra root flour, dried fish, prawns, tapioca, long beans and spices) was also fulfilled.

Aiyathurai Annai spent the days happily, attending temple festivals, football tournaments, literary meetings, weddings and all other community activities. One day during a casual talk, Sellathurai asked him, "Annai, what will you do if your son comes to take you back to Canada?" "I'll never budge from this place. See how healthy and happy am I, my BP and sugar levels are back to normal. I am now a free bird enjoying fresh air, unlike in Canada where I remained imprisoned within the four walls, without free circulation of fresh air. Does he want to take me there for my early exit? It's like taking me to the gallows." Just then a call. "It must be from your son," said Sellathurai, as he took the receiver and answered "Hello." "Hello, Chittappa, I'm Varan here, just to convey to you that I am making arrangements to come over there and bring my father back to Canada." "Why Thamby in such a hurry. See how happy and cheerful your father is. He is in fine health, his BP and sugar levels are quite normal. To be honest Annai, he wishes to prolong his stay here. Let him stay, we'll look after him and attend to all his needs. When signs of deterioration in his health appear, I'll inform you. You can come and take him back and treat him in Canada where medical facilities are excellent." "It sounds nice", thought Varan. "OK Chitappa let him be under your care, just call him, I want to talk to him." Not sure of what transpired between the brothers, Aiyathurai Annai took the receiver in fear and began softly, "Thamby!" "Appah! Chitappah told me everything .You continue to stay there, Take care of your health and call me quite often." "Sure Appah." Aiyathurai Annai's joy was exhilarating. He hugged his brother and thanked him for mediating on his behalf. Getting a cigar from him, he lit it and began puffing in ecstasy saying, "I'll die here instead of going there.Let it be heaven, can it match our Kuppilan, the bountiful village..."

சர்வதேச இந்து இளைஞர் பேரவை இலங்கை

INTERNATIONAL HINDU YOUTH FORUM

சர்வதேச இந்து இளைஞர் பேரவை இலங்கை
ஸ்தாபகர் சி. கணேஸ்குமார்(BA)

தலைவர்
சி.கஜேந்திரகுமார்
சர்வதேச இந்து இளைஞர் பேரவை
இலங்கை

யாழ் மாநகரில் அன்புக்கும், பண்புக்கும், புரிந்துணர்வுக்கும் பாலமாக விளங்குகின்ற குப்பிழான் கிராமத்தின் பொன் விழாவையும், அதனை முன்னிட்டு வெளியிடப்படும் சிறப்பு மலரையும் வாழ்த்தி நிற்கும் சர்வதேச இந்த இளைஞர் பேரவை.

பொன் விழாக்காணும்
பொருந்தும் பொன் நிலவே
என் நாளும் செழிப்பாய்
எழிலோடு வாழ்க நீ
குப்பிழான் என்றும்
குறைவிலா எம் நிலமே
குலவியே அறிஞரை
கொடுத்திட்ட பெரு நிலவே

தோட்ட வெளிகளில் நம்
தோட்டத்தை தந்துடுவாய்
ஆவினத்தின் பயன்பாடும்
அனுதினமும் நலம் தரவே
பொன் விழாக்கண்ட அன்னை
சீரோடும் சிறப்பும் பெற்று
நீடுழி வாழ்க என்றும்
நிறைவான வளமும் கண்டு

## குப்பிழான் விக்கினேஸ்வரா மன்றம் பிரித்தானியா
## உறுப்பினர்கள் 2014

திரு சுந்தரலிங்கம் அருந்தவராஜா

திரு நல்லதம்பி மோகனதாஸ்

திரு பாலசுப்பிரமணியம் முகுந்தன்

திரு இராமநாதன் சச்சிதானந்தன்

திரு பாலசுப்பிரமணியம் உபேந்திரன்

திரு செல்லையா பரமசிவம்

திரு பொன்னம்பலம் கணேசலிங்கம்

திரு சின்னத்துரை சிவகுமார்

திரு சதானந்தன் கஜானனன்

திரு குணலிங்கம் குணதாசன்

திரு செல்லையா ரஞ்சன்

திரு வைத்திலிங்கம் ஐங்கரன்

திரு சுப்பிரமணியம் மணிவண்ணன்

திரு பிரான்ஸிஸ் றொபின்சன்

திரு பொன்னம்பலம் மணிசேகரன்

திரு சம்பந்தர் ஞானலோஜன்

திரு கனிதசிங்கம் ஜெயபாலன்

மற்றும்

திரு முத்தையா இரத்தினபாலன்
(எமது மன்றத்தின் மூத்த ஆலோசகர், வழிகாட்டி)

உலகப் பந்தெங்கும் வாழும் குப்பிழான்
உறவுகளை இணைக்கும் உறவுப்பாலம்

**www.kuppilanweb.com**

செய்திகள், கட்டுரைகள், மரண அறிவித்தல்கள்,
புகைப்படங்கள், ஒளிப்படங்கள், என்று பல அம்சங்களை
தாங்கி கணணித்திரையில் எமது ஊரையே கண் முன்னே
காண்பிக்கின்றது உங்கள் இணையமான

**www.kuppilanweb.com**

இன்பத்திலும், துன்பத்திலும் உங்களோடு இணைகின்றது.
நாள்தோறும் முன்நூறுக்கும் அதிகமான வாசகர்கள் இந்த
இணையத்தை பார்வையிட்டு
வருகின்றார்கள் என்பது இந்த இணையம் எவ்வளவு தூரம்
எமது உறவுகளோடு இணைகின்றது என்பதற்கு ஒரு
எடுத்துக்காட்டு.
இந்த ஊடகமானது எந்த ஒரு அமைப்பின் கீழும்
இயங்கவில்லை.
இது தனிப்பட்ட சுதந்திரமான ஊடகம் இதில் வரும்
கருத்துக்கள் என்றுமே விமர்சனத்துக்குரியது

நிர்வாக இயக்குனர்
**ந. மோகனதாஸ்**




Design and Print
Snegan Publishing
Chennai, India
+91 9865566410

**Publication**
**Kuppilan Vigneswara Mandram U.K**